
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 21 - பொருளியல்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான **இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................. ✓ $\frac{4}{5}$
.............................................................................
.............................................................................

(ii) ............................................................................. ✓ $\frac{3}{5}$
.............................................................................
.............................................................................

(iii) ............................................................................. ✓ $\frac{3}{5}$
.............................................................................
.............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

○○○

# பாட உள்ளடக்கம்


| | பக்கங்கள் | | |
|---|---|---|---|
| வினாப்பத்திர அமைப்பு | i | - | ii |
| பொருளியல் வினாப்பத்திரம் I | 01 | - | 08 |
| பொருளியல் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 09 | - | 09 |
| பொருளியல் II இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 10 | - | 38 |
| குறிப்பு | | 39 | |

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை 2018

## 21 - பொருளியல்

## புள்ளி வழங்கும் விதம்

- பத்திரம் I

  காலம் 2 மணித்தியாலம்

  5 விடைகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள், சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

  ஒரு விடைக்கு 02 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 100

- பத்திரம் II

  காலம் 3 மணித்தியாலம்

  இப்பத்திரம் 2 பிரிவுகளைக் கொண்டது

  (அ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் - 05

  (ஆ) உப பகுதி - கட்டுரை வினாக்கள் 05

குறைந்தது ஒரு பகுதியில் வினாக்கள் 02 வீதம் தெரிவு வினாக்கள் 5 இற்கு விடை எழுதியிருத்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 100.

| | | |
|---|---|---|
| இறுதிப் புள்ளி கணித்தல் | பத்திரம் I | 100 |
| | பத்திரம் II | 100 |

இறுதிப்புள்ளி $200 \div 2 = 100$

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

**06.08.2018 / 1300 - 1500**

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

**21 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

| பகுதி இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | 01 - 03 | |
| 02 | 04 - 10 | |
| 03 | 11 - 16 | |
| 04 | 17 - 22 | |
| 05 | 23 - 28 | |
| 06 | 29 - 36 | |
| 07 | 37 - 43 | |
| 08 | 44 - 47 | |
| 09 | 48 - 50 | |
| மொத்தம் | | |

சுட்டெண் : ..............................

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
* மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

**1.** பின்வருவனவற்றுள் நியமக் கூற்று எது ?
(1) எரிபொருள் விலை அதிகரிப்பு, மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் வாகனங்களுக்கான கேள்வியைத் தூண்டும்.
(2) வருமானம் அதிகரிக்குமாயின், ஆடம்பரப் பொருள்களின் விற்பனை வீழ்ச்சியடையும்.
(3) மடிக்கணினிகளின் விலைகள் வீழ்ச்சியடையும்போது, மக்கள் அவற்றை அதிகளவு கொள்வனவு செய்வர்.
(4) வீட்டு உரிமையாளர்கள் அறவிடும் வீட்டு வாடகைகளை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும்.
(5) பொருளொன்றின் கேள்வித் தொகையானது அதன் விலை மாற்றத்துடன் எதிர்க்கணிய ரீதியில் தொடர்புபட்டுள்ளது. (.4.)

**2.** ஓர் உற்பத்திக் காரணியான நிலத்திற்கு பின்வருவனவற்றுள் எதனை உதாரணமாகக் கூறலாம் ?
(1) மாகம்புர துறைமுகம் (2) தெற்கு அதிவேக நெடுஞ்சாலை
(3) விக்டோரியா அணைக்கட்டு (4) அம்பேவல பாற்பண்ணை
(5) பாசிக்குடா கடற்கரை (.5..)

**3.** உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது இயங்கும் பொருளாதாரமொன்று தொடர்பில் பின்வருவனவற்றுள் எது எப்போதும் உண்மையாக இருக்கும் ?
(1) அது ஒரு தாராள சந்தைப் பொருளாதாரமாக இருத்தல் வேண்டும்.
(2) அது ஒரு கட்டளைப் பொருளாதாரமாக இருத்தல் வேண்டும்.
(3) அதன் வளங்கள் பூரணமாக வேலைவாய்ப்பில் இருக்கும்.
(4) அது உற்பத்தி வினைத்திறனைப் பெற்றுள்ளபோதிலும் வளங்களின் ஒதுக்கீட்டு வினைத்திறனை அதனால் எவ்விதத்திலும் அடைய முடியாது.
(5) அது ஒரு நேர்க்கோட்டு உற்பத்தி இயல்தகவு வளையியைக் கொண்டிருக்க வேண்டும். (.3..)

**4.** உற்பத்தி இயல்தகவு வளையியொன்று வரையப்பட்டுள்ள வரைபடத்தில் அமையச் செலவைக் காட்டுவது,
(1) உற்பத்தி இயல்தகவு வளையியின் சாய்வின் மூலமாகும்.
(2) உற்பத்தி இயல்தகவு வளையியின் உட்புறமுள்ள ஒரு புள்ளியின் மூலமாகும்.
(3) ஆரம்பப் புள்ளிக்கூடாகச் செல்லும் ஒரு நேர்க்கோட்டின் மூலமாகும்.
(4) குத்தச்சின் மீதுள்ள ஒரு புள்ளியின் மூலமாகும்.
(5) கிடையச்சின் மீதுள்ள ஒரு புள்ளியின் மூலமாகும். (..1..)

**5.** பின்வருவனவற்றுள் முதலாளித்துவப் பொருளாதாரமொன்றின் சிறந்த செயலாற்றத்திற்கு அவசியமானதும் கட்டளைப் பொருளாதாரத்திற்கு அவசியமற்றதுமான விடயம் எது ?
(1) மையப்படுத்தப்பட்டுள்ள தீர்மானம் எடுத்தல்
(2) வளங்களின் அருமைத்தன்மை
(3) தனியுரிமை நிறுவனங்கள்
(4) சொத்துரிமைப் பாதுகாப்பு
(5) நேர்க்கணிய வெளிவாரிகள் (..4..)

**6.** ஒரு நிறுவனம் ஒதுக்கீட்டு ரீதியில் வினைத்திறன் மிக்க வெளியீட்டு மட்டத்தில் உள்ளபோது,
(1) மொத்த வருவாய் மொத்தச் செலவுக்குச் சமப்படும்.
(2) எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படும்.
(3) எல்லை வருவாய் எல்லைச் செலவை விடக் கூடுதலாக இருக்கும்.
(4) விலையானது சராசரி மொத்தச் செலவுக்குச் சமப்படும்.
(5) விலையானது எல்லைச் செலவுக்குச் சமப்படும். (..5..)

**7.** ஏனைய காரணிகள் மாறாதநிலையில் X பொருளுக்கான விலை வீழ்ச்சியடைந்தால், X பொருளுக்கான சந்தையில் பின்வருவனவற்றுள் எது பெரும்பாலும் நிகழக்கூடும் ?
(1) X பொருளின் நிரம்பல் வீழ்ச்சியடையும்.
(2) X பொருளின் கேள்வி அதிகரிக்கும்.
(3) X பொருளின் கேள்வி வீழ்ச்சியடையும்.
(4) X பொருளின் கேள்வித் தொகை அதிகரிக்கும்.
(5) X பொருளின் நிரம்பல் தொகை அதிகரிக்கும். (..4..)

**8.** கேள்வி வளையி ஒன்றை வரையும்போது கைக்கொள்ளப்படும் எடுகோள்,
(1) விலை வீழ்ச்சியடையும்போது கேள்வித் தொகையானது எப்போதும் அதிகரிக்கும் என்பதாகும்.
(2) விலை வீழ்ச்சியடையும்போது கேள்வித் தொகையானது எப்போதும் வீழ்ச்சியடையும் என்பதாகும்.
(3) விலையில் ஏற்படும் மாற்றங்கள், நிரம்பலில் செல்வாக்குச் செலுத்தாது என்பதாகும்.
(4) விலைக் கேள்வி நெகிழ்ச்சியானது கேள்வி வளையியின் வழியே மாறாது என்பதாகும்.
(5) கேள்வியைப் பாதிக்கும் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் நிலையாகவுள்ளன என்பதாகும். (..5..)

**9.** சந்தையில் ஒரு பொருளுக்கான நிரம்பல் தொகை $(Q_S)$ மற்றும் கேள்வித் தொகை, $(Q_D)$ ஆகியன முறையே $Q_S = -30 + P$ எனவும் $Q_D = 240 - 2P$ எனவும் தரப்பட்டுள்ளன. இங்கு P என்பது அலகொன்றின் விலை ரூபாவிலாகும். இப்பொருளுக்கு விதிக்கப்படும் உற்பத்தி மீதான வரியில் ஏற்படும் ஒரு மாற்றம் காரணமாக, நிரம்பல் வளையி $Q_S = -36 + 2P$ என மாற்றமடைகிறது. வரியில் ஏற்படும் இம்மாற்றம் சமநிலை விலையை எவ்வாறு பாதிக்கும் ?
(1) சமநிலை விலை ரூ. 2 இனால் வீழ்ச்சியடையும்.
(2) சமநிலை விலை ரூ. 6 இனால் வீழ்ச்சியடையும்.
(3) சமநிலை விலை ரூ. 2 இனால் அதிகரிக்கும்.
(4) சமநிலை விலை ரூ. 6 இனால் அதிகரிக்கும்.
(5) சமநிலை விலை ரூ. 90 இனால் அதிகரிக்கும். (..3..)

**10.** தேயிலைக்கான கேள்வியும் நிரம்பலும் ஏககாலத்தில் அதிகரிக்குமாயின், தேயிலைச் சந்தையின் சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றிற்கு யாது நிகழும் ?

| | விலை | தொகை |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |
| (2) | வீழ்ச்சியடையும். | வீழ்ச்சியடையும். |
| (3) | வீழ்ச்சியடையும். | அதிகரிக்கும். |
| (4) | அதிகரிக்கும். | நிச்சயமில்லை. |
| (5) | நிச்சயமில்லை. | அதிகரிக்கும். |

(..5..)

11. ஒருவரது வருமானம் அதிகரிக்கும்போது பாலுக்கான அவரது கேள்வி அதிகரிக்குமாயின், பாலை உதாரணமாகக் கொள்ளத்தக்கது,
(1) ஓர் இழிவுப் பொருளுக்காகும். (2) ஓர் இலவசப் பொருளுக்காகும்.
(3) ஒரு சாதாரண பொருளுக்காகும். (4) ஒரு மேன்மை பொருளுக்காகும்.
(5) ஒரு கிபன் பொருளுக்காகும். (..3..)

12. ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருளுக்கான கேள்வியானது பூரண நெகிழ்வற்றதாகக் கருதுக. நிறுவனம் அந்தப் பொருளின் விலையை 6% இனால் அதிகரிக்குமாயின் நிறுவனத்தின் வருவாயின் மீது அதன் விளைவு யாது ?
(1) வருவாய் மாறாது. (2) வருவாய் 6% இனால் அதிகரிக்கும்.
(3) வருவாய் 6% இனால் குறையும். (4) வருவாய் பூச்சியமாக வீழ்ச்சியடையும்.
(5) வருவாய் 6% ஐ விடக் குறைவான அளவில் அதிகரிக்கும். (..2..)

13. 2016 ஆம் ஆண்டு கருவாவுக்கான போட்டிச் சந்தையொன்றில் ஒரு கிலோகிராம் கருவா ரூ. 900 விலையில் 10 மில்லியன் கிலோகிராம்கள் விற்பனை செய்யப்பட்டன. 2017ஆம் ஆண்டு அச்சந்தையில் கருவா கிலோகிராமொன்று ரூ. 800 விலையில் 10 மில்லியன் கிலோகிராம்கள் விற்பனை செய்யப்பட்டன. பின்வருவனவற்றுள் கருவாவுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றில் ஏற்பட்ட எம்மாற்றம் இத்தகைய நிலையை ஏற்படுத்தியிருக்கும் ?

| | கேள்வி | நிரம்பல் |
|---|---|---|
| (1) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (2) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (3) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (4) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (5) | வீழ்ச்சி | மாற்றமில்லை. |

(..3..)

14. குறித்த ஒரு நுகர்வுப் பொருளுக்கான சந்தை நிரம்பல் வளையியானது மேல்நோக்கிச் சரிந்து செல்வதாகவும் அதன் சந்தைக் கேள்வி வளையியானது கீழ்நோக்கிச் சரிந்து செல்வதாகவும் கருதுக. இப்பொருளுக்கு வழங்கப்படும் ஓர் அலகு மானியம் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை என்பவற்றை எவ்வாறு பாதிக்கும் ?

| | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளன் மிகை |
|---|---|---|
| (1) | குறையும். | குறையும். |
| (2) | குறையும். | அதிகரிக்கும். |
| (3) | அதிகரிக்கும். | அதிகரிக்கும். |
| (4) | அதிகரிக்கும். | குறையும். |
| (5) | அதிகரிக்கும். | மாறாது. |

(..3..)

15. போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் சந்தைக் கேள்வி, நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் வெளிப்படுத்தப்படுவதாகக் கருதுக.

$Q_D = 160 - 4P \qquad Q_S = -20 + 2P$

சந்தைச் சமநிலையின்போது விலைக்கேள்வி நெகிழ்ச்சி
(1) $-2.4$ ஆகும். (2) $-2.6$ ஆகும். (3) $-2.8$ ஆகும்.
(4) $-3.0$ ஆகும். (5) $-5.3$ ஆகும். (..4..)

16. ஒரு நிறுவனம் அதன் குறுங்கால உற்பத்திச் செயன்முறையில் ஒரு மாறுங் காரணியை மாத்திரம் பயன்படுத்துவதாகக் கொள்க. இங்கு நிறுவனம் குறைந்து செல்லும் விளைவினை எதிர்கொள்ளும் நிலையில், அந்நிறுவனம் மாறுங் காரணியை அதிகளவில் பயன்படுத்துமாயின், பின்வருவனவற்றுள் எது நிகழக்கூடும் ?
(1) எல்லைச் செலவு ஒரு நிலையான வீதத்தில் வீழ்ச்சியடையும்.
(2) எல்லைச் செலவானது குறைந்து செல்லும் வீதத்தில் வீழ்ச்சியடையும்.
(3) எல்லைச் செலவு அதிகரிக்கும்.
(4) எல்லை உற்பத்தி நிலையான வீதத்தில் அதிகரிக்கும்.
(5) எல்லை உற்பத்தி குறைந்து செல்லும் வீதத்தில் அதிகரிக்கும். (..3..)

17. ஒரு நிறுவனம் பூச்சிய வெளியீட்டை மேற்கொள்ளும்போது, அதன் மொத்தச் செலவுகள் ரூ. 300 ஆகும். நிறுவனம் 5 அலகுகளை உற்பத்தி செய்யும்போது அதன் மொத்தச் செலவு ரூ. 630 ஆகும். 5 அலகுகள் உற்பத்தி செய்யும்போது சராசரி மாறுஞ் செலவு,
(1) ரூ. 60 ஆகும். (2) ரூ. 66 ஆகும். (3) ரூ. 122 ஆகும்.
(4) ரூ. 126 ஆகும். (5) ரூ. 330 ஆகும். (..2..)

18. பின்வருவனவற்றுள் எவை நிறைபோட்டிச் சந்தையின் பண்புகளாகும் ?
A - புதிய நிறுவனங்கள் சந்தையில் இலகுவாகப் பிரவேசிக்கலாம்.
B - பொருள் வேறாக்கம் காணப்படமாட்டாது.
C - சந்தைக் கேள்வி வளையி பூரண நெகிழ்வுள்ளதாகும்.
D - சந்தையிலுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினதும் நிரம்பல் வளையி பூரண நெகிழ்வுள்ளதாகும்.
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) A, B, C ஆகியன மாத்திரம். (4) A, B, D ஆகியன மாத்திரம்.
(5) B, C ஆகியன மாத்திரம். (..1..)

19. நிறைபோட்டி நிறுவனமொன்றின் நிகழ்கால உற்பத்தி மட்டத்தில் அதன் எல்லைச் செலவு ரூ. 80 ஆகும். சராசரி மாறுஞ் செலவு ரூ. 50 ஆகவும், சராசரி நிலையான செலவு ரூ. 30 ஆகவும், உற்பத்திப்பொருளின் விலை ரூ. 80 ஆகவும் காணப்படுகின்றன. பின்வருவனவற்றுள் எக்கூற்று இந்நிறுவனம் தொடர்பில் சரியானது?
(1) பொருளியல் இலாபம் பூச்சியமாகும்; ஏனெனில் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படும்.
(2) பொருளியல் இலாபம் எதிர்க்கணியமாகும்; ஏனெனில் மொத்த வருவாய் மொத்தச் செலவை விடக் குறைவாகும்.
(3) பொருளியல் இலாபம் நேர்க்கணியமாகும்; ஏனெனில் மொத்த வருவாய் மொத்தச் செலவை விட அதிகமாகும்.
(4) பொருளியல் இலாபம் எதிர்கணியமாகும்; ஏனெனில் விலையானது சராசரி மாறுஞ் செலவை விட அதிகமாகும்.
(5) பொருளியல் இலாபம் பூச்சியமாகும்; ஏனெனில் விலையானது சராசரி மொத்தச் செலவுக்குச் சமனாகும். (..5..)

20. பின்வருவனவற்றுள் எச்சந்தையமைப்பினுள் நிறுவனங்கள் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் ?
(1) சிலவுரிமை (2) தனியுரிமை (3) நிறைபோட்டி
(4) இயற்கைத் தனியுரிமை (5) தனியுரிமைப் போட்டி (..1..)

21. பின்வருவனவற்றுள் வீட்டுத்துறையினரையும் வியாபார நிறுவனங்களையும் மாத்திரம் கொண்டுள்ள பொருளாதாரமொன்றின் வருமானச் சுற்றோட்டத்துடன் ஒத்திசைவான கூற்று எது ?
(1) வீட்டுத்துறையினர் பொருள்கள் சேவைகளின் உற்பத்தியாளராவர்; வியாபார நிறுவனங்கள் உற்பத்தி வளங்களின் நுகர்வோராவர்.
(2) வீட்டுத்துறையினர் உற்பத்தி வளங்களைப் பயன்படுத்துவோராவர்; வியாபார நிறுவனங்கள் சேமிப்புக்களை உருவாக்குபவராவர்.
(3) வீட்டுத்துறையினர் உற்பத்தி வளங்களின் நிரம்பலாளராவர்; வியாபார நிறுவனங்கள் பொருள்கள் சேவைகளின் உற்பத்தியாளராவர்.
(4) வியாபார நிறுவனங்கள் வரிகளைச் சேகரிக்கும் நிறுவனங்களாகும்; வீட்டுத்துறையினர் வரி வருமானத்தை உருவாக்குவோராவர்.
(5) வியாபார நிறுவனங்கள் உற்பத்தி வளங்களின் நிரம்பலாளராவர்; வீட்டுத்துறையினர் பொருள்கள் சேவைகளின் நுகர்வோராவர். (..3..)

22. பின்வருவனவற்றுள் மொத்த உள்நாட்டு உற்பத்தியை வரைவிலக்கணப்படுத்தும் கூற்று எது ?
(1) தரப்பட்ட காலப்பகுதியொன்றில், பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் மொத்த வெளியீட்டின் அளவாகும்.
(2) தரப்பட்ட காலப்பகுதியொன்றில், ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் எல்லா வெளியீடுகளினதும் மொத்த சந்தைப் பெறுமதியாகும்.
(3) தரப்பட்ட காலப்பகுதியொன்றில், ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் எல்லா முடிவுப்பொருள்கள், சேவைகளின் மொத்த சந்தைப் பெறுமதியாகும்.
(4) தரப்பட்ட காலப்பகுதியொன்றில், உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட எல்லா முடிவுப்பொருள்கள், சேவைகளின் மொத்தப் பெறுமதியாகும்.
(5) தரப்பட்ட காலப்பகுதியொன்றில், ஒரு பொருளாதாரத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட எல்லா முடிவுப்பொருள்கள், சேவைகளின் மொத்த சந்தைப் பெறுமதியிலிருந்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முடிவுப்பொருள்கள், சேவைகளின் சந்தைப் பெறுமதியைக் கழிக்க வரும் பெறுமதியாகும். (..3..)

**23.** மொத்தத் தேசிய வருமானத்தைக் கணிப்பிடும்போது அதில் **உள்ளடக்கப்படாதது** எது?
(1) தொழிலற்றோருக்கு வழங்கப்படும் நிதி உதவிகள்
(2) பங்குதாரருக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்
(3) கம்பனிகளின் பகிரப்படாத இலாபங்கள்
(4) நிலவுரிமையாளருக்குச் செலுத்தப்பட்ட வாடகைகள்
(5) வள உரிமையாளருக்குச் செலுத்தப்பட்ட சொத்து வருமானங்கள் (..1...)

**24.** கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்று மூன்று கைத்தொழில்களை மாத்திரம் கொண்டுள்ளதாகக் கருதுக. A கைத்தொழில் தனது உற்பத்திக்குத் தேவையான ரூ. 30 மில்லியன் பெறுமதியான இறக்குமதி உள்ளீடுகளைப் பயன்படுத்தி ரூ. 100 மில்லியன் பெறுமதியான வெளியீட்டை உற்பத்தி செய்து B கைத்தொழிலுக்கு விற்பனை செய்கிறது. B கைத்தொழில் இறக்குமதிகள் எதனையும் மேற்கொள்ளாமல் தனது உற்பத்தியில் ஒரு பகுதியை C கைத்தொழிலுக்கு ரூ. 300 மில்லியனுக்கு விற்பனை செய்வதுடன் மேலும் ஒரு வெளிநாட்டிற்கு ரூ. 60 மில்லியன் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்தது. C கைத்தொழிலானது ரூ. 30 மில்லியன் பெறுமதியான இறக்குமதி உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த தமது வெளியீடுகளை ரூ. 500 மில்லியனுக்கு இறுதி நுகர்வோருக்கு விற்பனை செய்கிறது.
இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது ?
(1) ரூ. 440 மில்லியன் (2) ரூ. 500 மில்லியன்
(3) ரூ. 900 மில்லியன் (4) ரூ. 960 மில்லியன்
(5) ரூ. 990 மில்லியன் (..2..)

**25.** வருமான மட்டம் ரூ. 5 000 இலிருந்து ரூ. 10 000 ஆக அதிகரிக்கும்போது நுகர்வுச் செலவீடானது ரூ. 7 000 இலிருந்து ரூ. 11 000 ஆக அதிகரிக்கிறது. இந்நிலையில் எல்லை நுகர்வு நாட்டமானது
(1) 0.8 ஆகும். (2) 0.9 ஆகும். (3) 1.0 ஆகும். (4) 1.2 ஆகும். (5) 1.4 ஆகும். (..1...)


**26.** பின்வருவனவற்றுள் எது மொத்த உள்நாட்டு உற்பத்தியை மிக அதிக அளவில் வீழ்ச்சியடையச் செய்யும் ?
(1) அரசாங்கக் கொள்வனவுகள் மற்றும் வரி அறவீடுகள் ஆகிய இரண்டிலும் தலா 50 பில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படல்
(2) அரசாங்கக் கொள்வனவுகள் மற்றும் வரி அறவீடுகள் ஆகிய இரண்டிலும் தலா 50 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படல்
(3) வரி அறவீடுகளில் 50 பில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படல்
(4) அரச கொள்வனவுகளில் 50 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படல்
(5) தேறிய ஏற்றுமதிகளில் 50 பில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படல் (..4..)

**27.** அரசதுறையற்ற பொருளாதாரமொன்றில் நுகர்வு (C), முதலீடு (I), ஏற்றுமதிகள் (X), இறக்குமதிகள் (M) என்பனவற்றின் பெறுமதிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$C = 200 + 0.75Y$ $I = 500$ $X = 150$ $M = 100$

இப்பொருளாதாரத்தின் சமநிலை மட்டத் தேசிய வருமானம் (Y) யாது ?
(1) 3 000 (2) 3 400 (3) 3 600 (4) 3 750 (5) 3 800 (..1...)

**28.** பின்வரும் வரைபடத்தில் $0Y_1$ என்பது சமநிலைத் தேசிய வருமான மட்டமும் $0Y^*$ என்பது நிறை தொழில்மட்ட தேசிய வருமான மட்டமுமாகும்.




இப்பொருளாதாரத்தின் பணச்சுருக்க இடைவெளி யாது ?
(1) Y*U (2) UV (3) KV (4) MV (5) $Y_1Y^*$ (..2..)

29. இலங்கையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடியாண்டு எது ?
(1) 1951 (2) 2006/07 (3) 2010 (4) 2012/13 (5) 2014 (..4..)

30. பின்வருவனவற்றுள் எது செலவுத்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தும் ?
(1) ஊழியத்தின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(2) மின்சாரத்தின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(3) வீட்டுத்துறையினரின் நுகர்வில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(4) அரசாங்கக் கொள்வனவுகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) பணநிரம்பலில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (..1..)

31. பின்வருவனவற்றுள் பெரும்பாலும் ஒரு நாட்டின் பணநிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தவல்லது எது ?
(1) சென்மதி நிலுவையின் ஒரு மிகை நிலை
(2) அரச பாதீட்டின் ஒரு மிகை நிலை
(3) வணிக வங்கி வைப்பாளர்களால் பணம் மீளப்பெறப்படல்
(4) வணிக வங்கிகள் தாம் வழங்கிய கடன்களை மீளப்பெறல்
(5) மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுக்குப் பிணைகள் விற்பனை செய்யப்படல் (..1..)

32. பரிமாற்ற நோக்கப் பணக்கேள்வியுடன் மிக நெருங்கிய விதத்தில் தொடர்புபட்டுள்ள பணத்தின் தொழிற்பாடாக அமைவது,
(1) பெறுமானத்திரட்டாகத் தொழிற்படலாகும்.
(2) கணக்கீட்டு அலகாகத் தொழிற்படலாகும்.
(3) பெறுமதியை அளவிடும் ஓர் அளவீடாகத் தொழிற்படலாகும்.
(4) பரிமாற்றூடகமாகத் தொழிற்படலாகும்.
(5) பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமமாகத் தொழிற்படலாகும். (..4..)

33. பின்வருவனவற்றுள் எது வணிக வங்கியொன்றின் ஐந்தொகையில் ஒரு பொறுப்பாகக் கருதப்படும் ?
(1) திறைசேரி உண்டியல்கள் (2) வாடிக்கையாளர்களின் வைப்புகள்
(3) கடன்களும் முற்பணங்களும் (4) அழைப்புக்கடன்கள்
(5) கழிவிடு செய்யப்பட்ட உண்டியல்கள் (..2..)

34. பணக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கி தற்போது பயன்படுத்தும் கொள்கைக் கருவிகள் யாவை ?
(1) வங்கி வீதமும் கொள்கை வட்டி வீதங்களும்
(2) நியதி ஒதுக்குத் தேவைகளும் திறந்த சந்தை நடவடிக்கைகளும்
(3) ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் கொள்கை வட்டி வீதங்களும்
(4) கடன் எல்லைக் கட்டுப்பாடுகளும் நியதி ஒதுக்குத் தேவைகளும்
(5) கொள்கை வட்டி வீதங்களும் திறந்த சந்தை நடவடிக்கைகளும் (..5..)

35. ஒரு பொருளின் நுகர்வு நேர்க்கணிய வெளிவாரியை ஏற்படுத்துமாயின், அவ்வாறான பொருளின் சந்தைச் சமநிலையின்போது பின்வருவனவற்றுள் எது உண்மையாக இருக்கும் ?
(1) எல்லை சமூக நன்மையானது எல்லை தனியார் செலவை விடக் குறைவாக இருக்கும்.
(2) எல்லை சமூக நன்மையானது எல்லை தனியார் நன்மையை விட உயர்வாக இருக்கும்.
(3) எல்லை சமூகச் செலவானது எல்லை சமூக நன்மையை விட உயர்வாக இருக்கும்.
(4) எல்லை சமூகச் செலவானது எல்லை தனியார் நன்மையை விடக் குறைவாக இருக்கும்.
(5) எல்லை சமூகச் செலவானது எல்லை சமூக நன்மைக்குச் சமனாகும். (..2..)

36. பின்வருவனவற்றுள் 'அரச தோல்வி' என பொருளியலாளர்களால் இனங்காணப்படும் விடயத்தில் பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்தும் காரணம் யாது ?
(1) சில பொருள்கள் மற்றும் சேவை உற்பத்திகளின் விளைவாக எதிர்க்கணிய வெளிவாரிகள் ஏற்படல்
(2) தீங்கிழைக்கும் பொருள்களின் (demerit goods) மிகையான நுகர்வு
(3) வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் சமமற்ற பங்கீடு
(4) சந்தைகளில் நிறைவில் போட்டி நிலவுகின்றமை
(5) அரசியல்வாதிகள் மத்தியில் நிலவும் சுயநலப் போக்கு (..5..)

**37.** ஒரு தூய பொதுப் பொருளை மேலும் ஒரு நுகர்வோருக்கு வழங்குவதற்கான எல்லைச் செலவு தொடர்பா பின்வருவனவற்றுள் எது சரியானது ?
(1) அது நேர்க்கணியமானது.
(2) அது பூச்சியத்திற்குச் சமனாகும்.
(3) அது குறித்த பொருள் உற்பத்தியின் ஆரம்பச் செலவுக்குச் சமனாகும்.
(4) நுகர்வோரின் எண்ணிக்கை குறையும்போது அது குறைவடையும்.
(5) நுகர்வோரின் எண்ணிக்கை குறையும்போது அது அதிகரிக்கும். (..2..)

**38.** இலங்கையில் வரி வருவாயின் பிரதான மூலாதாரங்களாக அமைவன,
(1) வருமானவரி, பெறுமதி சேர் வரி மற்றும் உற்பத்தி வரிகள் ஆகும்.
(2) பெறுமதி சேர் வரி, புரள்வு வரி மற்றும் பொருளாதாரச் சேவைக் கட்டணங்கள் ஆகும்.
(3) வருமானவரி, பெறுமதி சேர் வரி, முத்திரைக் கட்டணங்கள் ஆகும்.
(4) பெறுமதி சேர் வரி, இறக்குமதித் தீர்வைகள் மற்றும் தேச நிர்மாணவரி ஆகும்.
(5) பெறுமதி சேர் வரி, துறைமுக மற்றும் விமானநிலையக் கட்டணங்கள் மற்றும் பொருளாதார சேவை கட்டணங்கள் ஆகும். (..1...)

**39.** ஒரு பொருளாதாரப் பின்னடைவை எதிர்கொள்வதற்கான மிகப் பொருத்தமான ஓர் இறைக் கொள்கையாக பின்வருவனவற்றுள் எதனை அதிகரிக்கலாம் ?

(1) வட்டி வீதம் (2) பண நிரம்பல் (3) வரிகள்
(4) அரச முறிகளின் விற்பனை (5) அரச செலவீடு (..5...)

**40.** தற்போது இலங்கையின் ஏற்றுமதிகளின் பிரதான முடிவிடமாகவும் இறக்குமதிகளின் பிரதான தோற்றுவாயாகவும் அமைவன முறையே,
(1) ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் ஆகும்.
(2) ஐக்கிய அமெரிக்காவும் சீனாவும் ஆகும்.
(3) ஐரோப்பிய ஒன்றியமும் இந்தியாவும் ஆகும்.
(4) ஐக்கிய இராச்சியமும் சீனாவும் ஆகும்.
(5) ஐக்கிய இராச்சியமும் இந்தியாவும் ஆகும். (..2..)

**41.** ஒரு நாட்டின் வர்த்தக மாற்று விகிதம் அதன் அடியாண்டுப் பெறுமதியாகிய 100 இலிருந்து அதற்கடுத்த வருடம் 130 ஆக அதிகரித்தது. ஏற்றுமதி விலைகள் மற்றும் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட எத்தகைய மாற்றம் இந்நிலைமைக்குக் காரணமாயிருக்கும் ?

| | ஏற்றுமதி விலைச் சுட்டெண் | இறக்குமதி விலைச் சுட்டெண் |
|---|---|---|
| (1) | 30% வீழ்ச்சி | 10% அதிகரிப்பு |
| (2) | 20% வீழ்ச்சி | 10% வீழ்ச்சி |
| (3) | 30% அதிகரிப்பு | மாற்றமில்லை |
| (4) | 10% அதிகரிப்பு | 20% வீழ்ச்சி |
| (5) | மாற்றமில்லை | 30% அதிகரிப்பு |

(..3..)

**42.** ஒரு நாட்டின் வர்த்தக மீதியின் மிகை நிலையில் ஓர் அதிகரிப்புக்குக் காரணமாய் அமைவது,
(1) உள்நாட்டுப் பணவீக்கத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும்.
(2) இறக்குமதி வீழ்ச்சியும் ஏற்றுமதி அதிகரிப்புமாகும்.
(3) அதன் வர்த்தகப் பங்காளி நாடுகள் உயர் தீர்வைகளை விதித்தலாகும்.
(4) வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உள்வருகையில் ஏற்படும் அதிகரிப்பாகும்.
(5) நாட்டின் நாணயத்தின் பெறுமதி உயர்வடைவதாகும். (..2..)


**43.** பின்வருவனவற்றுள் 2016/17 காலப்பகுதியில் மனித அபிவிருத்திச் சுட்டெண் மற்றும் உலகப் போட்டித்தன்மைச் சுட்டெண் ஆகியவற்றில் இலங்கை அடைந்துள்ள நிலைகளின் உண்மையான சேர்க்கை எது ?

| | மனித அபிவிருத்திச் சுட்டெண் | உலகப் போட்டித்தன்மைச் சுட்டெண் |
|---|---|---|
| (1) | 73 | 71 |
| (2) | 73 | 60 |
| (3) | 72 | 58 |
| (4) | 70 | 68 |
| (5) | 68 | 85 |

(..1...)

**44.** பின்வரும் வரைபடம் ஜப்பானிய யென்னுக்கான நாணய மாற்றுச் சந்தையில் இலங்கை ரூபாவுக்கான கேள்வி மற்றும் இலங்கை ரூபாவின் நிரம்பல் என்பவற்றைக் காட்டுகிறது.

ஆரம்பத்தில் சந்தை K புள்ளியில் சமநிலையடைகிறது. இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் மீதான தீர்வை கணிசமான அளவு குறைக்கப்பட்டதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் மீதான கேள்வி அதிகரித்ததனால் வெளிநாட்டு நாணயச் சந்தையில் அதன் புதிய சமநிலைப் புள்ளி எதுவாக இருக்கும்?




(1) A (2) B (3) C (4) D (5) E (..4..)

**45.** வருமானச் சமமின்மை அளவிடப்படுவது.

(1) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் மொத்தத் தேசிய வருமானத்திற்கும் இடையிலான வேறுபாட்டின் மூலமாகும்.
(2) கினி குணகத்தின் மூலமாகும்.
(3) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தின் மூலமாகும்.
(4) தேசிய வறுமைக் கோட்டின் மூலமாகும்.
(5) தலைக்குரிய வருமானத்தின் மூலமாகும். (..2..)

**46.** பின்வருவனவற்றுள் தற்போது மனித அபிவிருத்திச் சுட்டெண்ணை உருவாக்குவதில் பயன்படுத்தப்படும் மூன்று குறிகாட்டிகளைத் தெரிவுசெய்க.

A - கொள்வனவு சக்தி சமப்படுத்தப்பட்ட தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானக் குறிகாட்டி
B - பிறப்பு வீதக் குறிகாட்டி
C - ஆயுள் எதிர்பார்க்கைக் குறிகாட்டி
D - வளர்ந்தோர் எழுத்தறிவுக் குறிகாட்டி
E - கல்விக் குறிகாட்டி

(1) A, B, C (2) A, C, D (3) A, C, E (4) A, D, E (5) C, D, E (..3..)

**47.** பின்வருவனவற்றுள் எவை நாடுகளுக்கிடையில் வாழ்க்கைத் தர வேறுபாடுகளை எடுத்துக்காட்டும்போது தலைக்குரிய மெய் மொத்தத் தேசிய வருமான அளவீடானது ஒரு பிழையான முடிவுக்கு இட்டுச் செல்லும் குறிகாட்டியாக அமையும் என்பதற்கான இரு வாதங்களாகும் ?

A - அது பணவீக்க வீத வேறுபாடுகளைக் கருத்திற் கொள்வதில்லை.
B - சந்தையல்லா பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக நாடுகளுக்கிடையில் பல்வேறு மட்டங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.
C - நுகர்வோர் சுவை வேறுபாடுகளைக் கருத்திற் கொள்வதில்லை.
D - நாணய மாற்றுவீதப் பிறழ்வுகளை அது கருத்திற் கொள்வதில்லை. ஆகவே அவ் அளவீட்டை 'கொள்வனவுச் சக்தி சமப்படுத்தல்' அடிப்படையில் வெளிப்படுத்த வேண்டும்.
E - 'வருமான அணுகுமுறை' ஊடாகக் கணிப்பிடப்பட்ட மொத்தத் தேசிய வருமான அளவீடானது 'செலவீட்டு அணுகுமுறை' ஊடாகக் கணிக்கப்பட்ட அளவீட்டை விட வேறுபட்டிருக்கும்.

(1) A, B (2) B, C (3) B, D (4) C, D (5) D, E (..3..)

**48.** பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்களில் முதலாவது வறுமை பற்றியதாகும். இக்குறிக்கோளின் நோக்கம்,
(1) 2030 ஆகும்போது வறுமையை அரைவாசியாகக் குறைப்பதாகும்.
(2) 2030 ஆகும்போது எல்லா இடங்களிலும் எல்லா வடிவங்களிலான வறுமையையும் முடிவுக்குக் கொண்டு வருவதாகும்.
(3) 2030 ஆகும்போது வறுமையை 75% ஆகக் குறைப்பதாகும்.
(4) பட்டினியை முடிவுக்குக் கொண்டு வந்து எல்லா மக்களும் போதியளவு உணவைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலை உறுதிப்படுத்துவதாகும்.
(5) வறுமையைக் குறைப்பதில் முன்னேற்றம் காண்பதற்காக ஒவ்வொரு நாட்டுக்கும் உதவிசெய்தலாகும்.
(..2..)

**49.** ஒரு நாட்டின் பிரதான மூன்று வயதுப் பிரிவினரிடையிலான சனத்தொகைப் பரம்பல் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வயதுப் பிரிவு | சனத்தொகை (மில்லியன்) |
|---|---|
| 0 - 14 வருடங்கள் | 6 |
| 15 - 64 வருடங்கள் | 20 |
| 65 வருடங்களும் அதற்கு மேலும் | 4 |

இந்நாட்டின் மொத்த தங்கியிருத்தல் விகிதம்
(1) 10% ஆகும். (2) 20% ஆகும். (3) 30% ஆகும்.
(4) 33% ஆகும். (5) 50% ஆகும். (..5..)

**50.** பின்வரும் அட்டவணையில், இலங்கையின் தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைசார் உள்ளடக்கத்தைச் சரியாகக் குறிப்பிடும் தரவுக் கூட்டம் எது ?

| | விவசாயம், காடாக்கல், மீன்பிடிக் கைத்தொழில் (%) | கைத்தொழில்கள் (%) | பணிகள் (%) |
|---|---|---|---|
| (1) | 5 | 20 | 64 |
| (2) | 7 | 27 | 57 |
| (3) | 10 | 25 | 50 |
| (4) | 12 | 28 | 48 |
| (5) | 15 | 30 | 45 |

(..2..)

❋❋❋

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) ஓர் உற்பத்திக் காரணி என்ற வகையில் முயற்சியாண்மையானது உழைப்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ? (04 புள்ளிகள்)

(ii) "அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு விதியினை" விளக்குக. அமையச் செலவு அதிகரிக்க ஏதுவாகும் காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) எந்தவொரு பொருளாதார முறைமையும் தீர்வுகாண வேண்டியுள்ள மூன்று அடிப்படைப் பிரச்சினைகளைப் பட்டியற்படுத்தி, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள மூன்று பிரதான பொருளாதார முறைமைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) வேலையின்மை வீத அதிகரிப்பும் தொழில்புரியும் வயது சனத்தொகை அதிகரிப்பும் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தும் விளைவுகளை, உற்பத்தி இயல்தகவு வளையிகளைப் பயன்படுத்தி தனித்தனியே விளக்குக. (04 புள்ளிகள்)

(v) "ஒரு பொருளின் நுகர்வுக்காக உம்மிடமிருந்து விலை அறவிடப்படாதாயின் அப்பொருள் ஓர் இலவசப் பொருளாக இருக்க வேண்டும்."
இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா ? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

**(i)** - மக்களில் சிலர் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் பொருட்டு நிலம் உழைப்பு மற்றும் மூலதனம் ஆகிய வளங்களை ஒருங்கிணைக்கும் திறமையைக் கொண்டிருப்பது முயற்சியாண்மை எனப்படும்.

**(01 புள்ளி)**

- பொருள்கள் சேவைகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படக் கூடிய மக்களின் உடல் மற்றும் உளரீதியான முயற்சி உழைப்பு எனப்படும்.

**(01 புள்ளி)**

- முயற்சியாண்மைக்கான கொடுப்பனவு இலாபம் அல்லது பங்கிலாபம் என அழைக்கப்படும். உழைப்புக்கான கொடுப்பனவு சம்பளம் அல்லது கூலி என அழைக்கப்படும்.

- முயற்சியாளன் என்பவன் வியாபார அடிப்படையில் புதிய பொருள்களை புதிய உற்பத்தித் தொழினுட்பங்களை அல்லது புதிய வியாபாரத் தாபன வடிவங்களையுங் கூட அறிமுகப்படுத்த எத்தனிக்கும் ஒரு புத்தாக்கவாளனாவான். ஓர் உழைப்பாளி வியாபார அடிப்படையில் புத்தாக்கங்களை அறிமுகப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஒருவரல்ல.

- முயற்சியாளர் இடரை ஏற்பவராவர். இடரை ஏற்பதிலேயே அவர்தம் வெற்றி தங்கியுள்ளது. மறுபுறம் உழைப்பாளர்கள் இடரைத் தவிர்ப்பவராவர்.

- முயற்சியாளர் அடிப்படைக் கொள்கைத் தீர்மானங்களை எடுப்பர். அதாவது இவை நாளாந்த நடவடிக்கைகளோடு தொடர்பற்ற ஆனால் வியாபார நிறுவனத்தின் எதிர்காலப் போக்கினைத் நிர்ணயிக்கும் தீர்மானங்களாகும். முயற்சியாளர் தமது தீர்மானங்களை நடைமுறைக்கிடும் பொருட்டு ஊழியர்களை வேலைக்கமர்த்துவர்.

**(எவையேனும் இரு வேறுபாடுகளுக்கு 02புள்ளிகள்)**

**(ii)** - ஓர் உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது ஒரு பொருளின் உற்பத்தித் தொகையை சம அளவுகளால் அதிகரிக்கும் போது அதன் பொருட்டு விட்டுக் கொடுக்க அல்லது தியாகம் செய்ய வேண்டியுள்ள மற்றைய பொருளின் தொகை (அமையச் செலவு) படிப்படியாக அதிகரிக்கும்.

[ **ஒரு மாற்றீடான விடை:** இருக்கின்ற வளங்கள் யாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்திய நிலையில் ஒரு பொருளின் உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பானது அதன் அமையச் செலவில் அல்லது அதன் பொருட்டு விட்டுத்தர வேண்டியுள்ள மற்றைய பொருளின் தொகையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்]

**(02 புள்ளிகள்)**

- அமையச் செலவு அதிகரிப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு.
- வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவையன்று. எனவே ஒரு வகையான வளம் மற்றொரு வளத்திற்காகப் பூரணமாகப் பதிலீடு செய்யப்படக் கூடியதன்று
- வெவ்வேறு பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் தொழினுட்பங்கள் வேறுபட்டவையாகும்.
- ஒரு குறிப்பிட்ட பொருளின் அல்லது சேவையின் உற்பத்திக்கு மிகப் பொருத்தமாகக் காணப்படும் ஒரு வளம் மற்றொரு பொருளின் அல்லது சேவையின் உற்பத்திக்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம்.

**(எவையேனும் இரு காரணங்களுக்கு 02புள்ளிகள்)**

**(iii)**

- எந்தப் பொருள்களை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும்? (அல்லது எதனை உற்பத்தி செய்வது?)
- எந்த முறைகளைப் பயன்படுத்தி ஒரு தேசத்தின் பொருள்கள் சேவைகளின் வெளியீட்டை உற்பத்தி செய்யலாம்? (அல்லது எவ்வாறு உற்பத்தி செய்வது?)
- யாருக்காக வெளியீட்டை உற்பத்தி செய்வது? (அல்லது யார் அதனை பெறுகிறார்?)


**(மூன்று அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் 01 புள்ளி)**

மூன்று அடிப்படைப் பொருளாதார முறைமைகள்:

- சந்தை முறைமை **(01 புள்ளி)**
- கட்டளை முறைமை **(01 புள்ளி)**
- பாரம்பரிய முறைமை / கலப்பு முறைமை **(01 புள்ளி)**


(பொருளாதார முறைமைகளை "முதலாளித்துவ முறை" மற்றும் "சோஷலிஸ முறை" என அடையாளப்படுத்தப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

(iv)




வேலையின்மை வீதம் அதிகரிக்கும் போது பொருளாதாரத்திலுள்ள வளங்களின் பயன்பாடு மேலும் வீழ்ச்சியடையும். எனவே வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு உண்மை வெளியீடானது இடப்புறமாக **A** புள்ளியை விடக் குறைவாகக் காணப்படும். புள்ளி **A** யானது **PPC**யின் உட்புறம் இருக்க வேண்டும்

**(சரியான வரைபடத்திற்கு 01புள்ளி. சரியான விளக்கத்திற்கு 01 புள்ளி)**




பொருளாதாரத்தின் தொழில் புரியும் வயதுச் சனத்தொகை அதிகரிக்கும் போது வளத்திரட்சியினளவு விரிவாகும். இதன் விளைவாக உற்பத்தி இயலளவு அல்லது பொருளாதாரத்தின் இயலளவு வெளியீடு அதிகரிக்கும். இதனை வரைபடத்தில் PPC வளையி வலப்புற நகர்வின் மூலம் காட்டலாம். (AB யிலிருந்து CD வரை)

**(சரியான வரைபடத்திற்கு 01புள்ளி. சரியான விளக்கத்திற்கு 01 புள்ளி)**

(V) - அருமைத் தன்மையைக் கொண்டிராத ஒரு பொருள் **இலவசப் பொருளாகும்.** ஒருபொருள் இலவசப் பொருளாயின் அது சகலருக்கும் விருப்பங்களைப் பூர்த்திசெய்யப் போதியளவில் கிடைக்கத்தக்கதாக இருக்கும். எனவே ஒரு இலவசப்பொருள எவ்வித விட்டுக்கொடுப்புமின்றிப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகும்

**(இலவசப்பொருளுக்கான வரைவிலக்கணத்திற்கு 02 புள்ளிகள் )**

- ஒரு பொருளுக்கு விலை அறவிடப்படுகிறதா அல்லது இலவசமாக வழங்கப் படுகிறதா என்பது பொருளொன்றின் அருமைத்தன்மையை நிர்ணயிப்பதற்கான தகுதிவிதியன்று.சமூக நலனை முன்னேற்றல் அல்லது வியாபார ஊக்குவிப்பு போன்ற காரணங்களுக்காக சில பொருளாதாரப் பொருள்களும் சேவைகளும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படலாம். இப்பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்ய மாற்றுப்பயன்பாடு கொண்ட வளங்கள் தேவைப்படும். எனவே அவை இலவசப் பொருள்களன்று. அவற்றின் உற்பத்தியில் அமையச் செலவுண்டு.

**(விளக்கத்திற்கு 02 புள்ளிகள்)**

**2.** (i) தனிநபர் கேள்வி வளையியையும் சந்தைக் கேள்வி வளையியையும் வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)

(ii) "ஒரு கிபன் பண்டமானது ஓர் இழிவுப் பண்டமாகும். ஆனால், ஓர் இழிவுப் பண்டமானது கட்டாயமாக ஒரு கிபன் பண்டமாக இருக்க வேண்டியதில்லை." விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) விலைக் கேள்வி நெகிழ்ச்சி என்பதனால் கருதப்படுவதென்ன ? (02 புள்ளிகள்)

(iv) ஒரு நாட்டில் பூசணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பூசணி விற்பனை மூலம் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத கடினமான சூழ்நிலையை எதிர்நோக்குவதாகக் கருதுக. பூசணிக்கான சந்தையின் கேள்வி, நிரம்பல் நிலைமைகள் பின்வரும் சமன்பாடுகளால் தரப்படுகின்றன.

கேள்வி $(Q_D) = 350 - 10P$ நிரம்பல் $(Q_S) = -40 + 5P$

இங்கு, P என்பது கிலோகிராமொன்றின் விலை ரூபாவிலும் Q என்பது தொகை மெற்றிக் தொன்களிலும் தரப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

(அ) சந்தைச் சமநிலை விலையும் தொகையும் யாவை ? (02 புள்ளிகள்)

(ஆ) விவசாயிகளுக்குச் சலுகையொன்றை வழங்கும் நோக்கத்தில் அரசாங்கம் குறைநிரப்புக் கொடுப்பனவு (deficiency payment scheme) முறையொன்றை அறிமுகப்படுத்துவதாகக் கொள்க. இம்முறையின் கீழ் அரசாங்கமானது ஒரு கிலோகிராம் பூசணிக்கு விவசாயிகள் ரூ. 30 பெறுவதை உறுதிசெய்கிறது. அத்துடன் விவசாயிகள் உற்பத்திசெய்யும் பூசணி விளைச்சல் முழுவதையும் சந்தையில் காணப்படும் எந்தவொரு விலையிலும் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்துகிறது.

விவசாயிகள் தற்போது எந்தளவு பூசணியை நிரம்பல் செய்வர் ? (02 புள்ளிகள்)

(இ) விவசாயிகள் நிரம்பல் செய்யும் பூசணிகள் முழுவதையும் விற்பனை செய்வதற்கு அவர்கள் என்ன விலையை அறவிட வேண்டியிருக்கும் ? (02 புள்ளிகள்)

(ஈ) விவசாயிகள் குறைநிரப்புக் கொடுப்பனவாக அரசாங்கத்திடமிருந்து எந்தளவுப் பணத்தைப் பெறுவர் ? (02 புள்ளிகள்)

(உ) குறைநிரப்புக் கொடுப்பனவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் நுகர்வோன் மிகையையும் உற்பத்தியாளன் மிகையையும் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(i)** - தனிநபர் கேள்வி வளையி என்பது ஏனைய காரணிகள் மாறா நிலையில் குறிப்பிட்ட காலப் பகுதியொன்றில் சாத்தியமான பல்வேறு விலைகளில் தனிப்பட்ட நுகர்வோனொருவன் ஒவ்வொரு விலையிலும் இயலுமையுடன் கொள்வனவு செய்ய விரும்பும் பல்வேறு தொகைகளைக் காட்டும் ஒரு எளிமையான வரைபாகும்

**(01 புள்ளி)**

- சந்தைக் கேள்வி வளையி என்பது ஏனைய காரணிகள் மாறா நிலையில் குறிப்பிட்ட காலப் பகுதியொன்றில் ஒவ்வொரு விலையிலும் எல்லா நுகர்வோரும் இயலுமையுடன் கொள்வனவு செய்ய விரும்பும் மொத்தத் தொகைகளைக் காட்டும் ஒரு வரைபாகும்

[மாற்றீடான விடை: சந்தைக் கேள்வி வளையியானது தனிநபர் கேள்வி வளையிகளின் கிடையச்சுக் கூட்டுத் தொகையாகும். இது ஒவ்வொரு விலையிலும் ஒவ்வொரு நபரும் எழுப்பிய கேள்வித் தொகைகளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும்.]

**(01 புள்ளி)**

**(ii)** - இழிவுப் பொருளொன்றின் விலை மாற்ற விளைவு வேறுபட்டதாகும். இழிவுப் பொருளொன்றின் வருமான விளைவு எதிர்க்கணியமாகும். எனவே ஒரு இழிவுப் பொருளைப் பொறுத்த மட்டில் ஒரு விலை வீழ்ச்சியானது எப்போதும் கேள்வித் தொகை அதிகரிப்புக்கு இட்டுச் செல்லாது.

- குறைந்த விலை பதிலீட்டு விளைவினைக் கொண்டிருக்கும். இது எப்போதும் கேள்வித் தொகையினை அதிகரிக்கச் செய்யும். இப்பதிலீட்டு விளைவானது எதிர்க்கணிய வருமான விளைவினை ஓரளவுக்கு ஈடுசெய்யும். இறுதி முடிவு இவ்விரு விளைவுகளினதும் சார்பு ரீதியான பலத்தில் தங்கியுள்ளது.

- எனவே சில வகை இழிவுப் பொருள்களைப் பொறுத்தவரை எதிர்க்கணிய வருமான விளைவு பகுதியளவிலேயே பதிலீட்டு விளைவினை ஈடுசெய்யும். இதனால் விலை வீழ்ச்சியின் காரணமாக கேள்வித் தொகை அதிகரிக்கும். ஆனால் அந்த அதிகரிப்பானது ஒரு சாதாரண பொருள் தொடர்பில் ஏற்படும் அதிகரிப்பை விட குறைவானதாக இருக்கும். இந்நிலை ஒரு இழிவுப் பொருள் தொடர்பில் பொதுவான அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளதுடன் இதுவும் கீழ் நோக்கிய சரிவுடைய கேள்வி வளையிக்கு இட்டுச் செல்கிறது.

- எதிர்கணிய வருமான விளைவானது உண்மையில் பதிலீட்டு விளைவினை விடக் கூடுதலானதாக மாறும் போது அது நேர்க்கணிய சரிவுடைய விலைசார் கேள்வி வளையியை உருவாக்குகிறது. கிபன் பொருள்கள் தொடர்பில் இதுவே நடைபெறுகிறது. இவ்வாறு நடைபெற, குறித்த பொருள் ஒரு இழிவுப் பொருளாக இருக்க வேண்டும். ஆனால் அது மட்டும் போதுமானதன்று. ஒரு விலை மாற்றமானது பதிலீட்டு விளைவினை மீறிச் செல்லுமளவிற்கு வலுவான எதிர்க்கணிய வருமான விளைவினைக் கொண்டிருக்க வேண்டும். எனவே எல்லா இழிவுப் பண்டங்களும் கிபன் பண்டமல்ல.

**(ஒவ்வொரு படிமுறைக்கும் தலா 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) - குறித்த பொருளின் விலை மாற்றங்களுக்கேற்ப அப்பொருளின் கேள்வித்தொகையில் ஏற்படும் துலங்கல்களின் (மாற்றங்களின்) அளவே விலைக் கேள்வி நெகிழ்ச்சியாகும்.

- கேள்வித் தொகையில் ஏற்படும் சதவீத மாற்றத்தை விலை மாற்ற வீதத்தினால் பிரிப்பதன் மூலம் இது கணிப்பிடப்படுகிறது. பின்வரும் சூத்திரத்தின் மூலம் இதனை வரைவிலக்கணப்படுத்தலாம்:

$$\text{விலைக் கேள்வி நெகிழ்ச்சி} = \frac{\text{கேள்வித் தொகை மாற்ற வீதம் (\%)}}{\text{விலை மாற்ற வீதம் (\%)}}$$

**(வரைவிலக்கணத்திற்கு 01 புள்ளி சூத்திரத்திற்கு அல்லது கணிப்பீட்டு முறைக்கு 01 புள்ளி; மொத்தம் 02 புள்ளிகள்)**

**(iv) -** **(அ)** சந்தைச் சமநிலை விலையும் தொகையும்:

$Q_D = Q_S$; 350 -10P = - 40 +5P

390 = 15 P

P = ரூபா. 26 **(01 புள்ளி)**

$Q_D$ = 350 – 10 (26)

$Q_D$ = 350 – 260

$Q_D$ = 90 மெற்றிக் தொன்கள் **(01 புள்ளி)**

**(ஆ)** - கிலோகிராமொன்று 30 ரூபா விலையில் சந்தை நிரம்பல்:

$Q_S$ = - 40 + 5P

$Q_S$ = - 40 + 5 (30)

$Q_S$ = - 40 + 150 = 110 மெற்றிக் தொன்கள் **(02 புள்ளிகள்)**

(இ) - விளைச்சல் முழுவதையும் விற்பதற்கு அறவிட வேண்டிய விலை:

$Q_D$ = 350 – 10P

$Q_D$ = 110

எனவே: 110 = 350 – 10P

10P = 350 – 110

10P = 240

P = கிலோகிராமொன்று 24 ரூபா **(02 புள்ளிகள்)**

(ஈ) - அரசாங்கத்திடமிருந்து விவசாயிகள் பெற்ற குறைநிரப்புக் கொடுப்பனவினளவு:

கிலோகிராமொன்றிற்கான குறைநிரப்புக் கொடுப்பனவு =
உத்தரவாத விலை (ரூபா 30) – சந்தை விலை (ரூபா 24) = ரூபா. 6
மொத்த குறைநிரப்புக் கொடுப்பனவு = ரூபா. 6 x (110 மெற்றிக் தொன்கள்)
= 6 x 110,000 = 660,000
= ரூபா. 660,000

**(02 புள்ளிகள்)**

**[மாற்றீடான விடை: 660]**

(e) - குறைநிரப்புக் கொடுப்பனவுத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட பின் நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளன் மிகையும்:

நுகர்வோன் மிகை = அதியுச்ச கேள்வி விலை – சந்தைவிலைX (கொள்வனவுத் தொகை) / 2

= (35 – 24) X (110,000) / 2 = 1210,000 / 2 = 605,000

= ரூபா. 605,000 **(02 புள்ளிகள்)**

[மாற்றிடான விடை: 605]

$$\text{உற்பத்தியாளன் மிகை} = \frac{(\text{விவசாயிகள் பெற்ற விலை} - \text{அதிகுறைந்த நிரம்பல் விலை}) \times (\text{விற்பனைத் தொகை})}{2}$$

$$\text{உற்பத்தியாளன் மிகை} = \frac{30 - 8\ (110,000)}{2} = \frac{22 \times 110,000}{2} = 1210,000$$

$$= \text{ரூபா. } 1210,000$$ **(02 புள்ளிகள்)**

**[மாற்றீடான விடை: 1210]**

**3.** (i) பின்வரும் கூற்றுகள் சரியா, பிழையா எனக் குறிப்பிட்டு, உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

(அ) குறைந்து செல்லும் விளைவுகள் தொழிற்பட ஆரம்பிக்கும்போது மொத்த உற்பத்தியானது வீழ்ச்சியடைய ஆரம்பிக்கும்.

(ஆ) சொத்து வரிகள், கட்டடக் காப்புறுதி செலுத்தல்கள் மற்றும் கடன் மீளச் செலுத்தல்கள் (amortization payments) ஆகியன நிலையான செலவுகளாகும்.

(இ) குறைந்து செல்லும் விளைவுகள் மற்றும் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவுகள் என்பன ஒரே விடயத்தை விளக்கும் வேறுபட்ட வழிகளாகும்.

(ஈ) எல்லைச் செலவுகள், சராசரி மாறுஞ் செலவுகளை விட உயர்வாக இருப்பின், எல்லைச் செலவுகள் குறைவடைந்து செல்ல வேண்டும். (08 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் ஒன்றில் 'பிரவேசத் தடைகள்' என்பதனால் கருதப்படுவதென்ன என்பதை இரு உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிறைபோட்டி நிறுவனமொன்றின் நிரம்பல் வளையிக்கும் அதன் எல்லைச் செலவு வளையிக்கும் இடையிலான தொடர்பு யாது ? (04 புள்ளிகள்)

(iv) பொருளாதார வாடகைக்கும் மாற்றல் பெறுகைகளுக்கும் இடையிலான வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

(i) (அ) - பிழை : குறைந்து செல்லும் விளைவுகள் தொழிற்பட ஆரம்பிக்கும் போது மொத்த உற்பத்தி (TP) குறைந்து செல்லும் வீதத்தில் அதிகரிக்கும். மொத்த உற்பத்தி வளையியின் சாய்வு நேர்க்கணியமாகும் ஆயினும் அதன் பெறுமதி குறைவடையும்.

(ஆ) – சரி: இச்செலவுகள் குறுங்காலத்தில் வெளியீட்டு மட்டத்துடன் மாற்றமடைவதில்லை. இவை தவிர்க்க முடியாத செலவுகளாகும் ஏனெனில் இவை உற்பத்தி இடம் பெறாவிட்டாலும் மேற்கொள்ளப்பட வேண்டியனவாகும்.

(இ) – பிழை: இவை இரு வேறுபட்ட சம்பவங்களாகும். குறைந்து செல்லும் விளைவுகள் குறுங்காலத்தில் ஓர் நிலையான காரணியுடன் மாறுங்காரணியை அதிக அளவில் பயன்படுத்தும் போது ஏற்படுகின்றன. அளவுத்திட்ட விளைவுகள் நீண்ட காலத்தில் எல்லாக் காரணிகளையும் மாற்றியமைக்கும் போது ஏற்படுகிறது. அதன் போது காரணிவிகிதங்கள் நிலையாகவுள்ள போது அளவுத்திட்டம் மாற்றமடைகிறது.

(ஈ) – பிழை: எல்லைச் செலவு சராசரி மாறுஞ் செலவை விட உயர்வாக இருப்பின் எல்லைச் செலவு அதிகரிக்க வேண்டும். எல்லைச் செலவு அதிகரிக்குமாயின் சராசரி மாறுஞ் செலவும் அதிகரிக்க வேண்டும்.

(ஒரு விளக்கத்திற்கு தலா **02** புள்ளிகள் வீதம் 08 புள்ளிகள்; "சரி" அல்லது "பிழை" என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பின் புள்ளி இல்லை)

**(ii)** - பிரவேசத் தடை என்ற பதமானது தனிநபரொருவர் அல்லது நிறுவனமொன்று தொழிலொன்றில் அல்லது வியாபாரமொன்றில் அல்லது கைத்தொழிலொன்றில் பிரவேசிக்க முயலும் போது எதிர்கொள்ள நேரிடும் தடைகளையே குறிக்கிறது. பிரவேசத்தடைகள் கைத்தொழிலொன்றின் போட்டித்தன்மையை மட்டுப்படுத்தும்.

- பிரவேசத் தடைகள் பல்வகைப்படலாம்: செயற்கைத் தடைகள் இயற்கைத் தடைகள் சட்டரீதியான தடைகள் இடஅமைவுடன் தொடர்புபட்ட அல்லது செலவு நிலைமைகளுடன் தொடர்புபட்ட தடைகள். பல்வேறு கைத்தொழில்களின் நீண்டகால போட்டித் தன்மையை நிர்ணயிப்பதில் இவை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

**(02 புள்ளிகள்)**

- இரு உதாரணங்கள்:
  - அளவுத்திட்டச் சிக்கனங்கள்
  - இயற்கைத் தனியுரிமைகள் - பொது வசதிகள்
  - சட்டரீதியான தடைகள்: காப்புரிமைகள், அனுமதிப் பத்திரங்கள்
  - அத்தியாவசிய மூலப் பொருள்களின் உரிமை அல்லது கட்டுப்பாடு

**(தலா 01 புள்ளி வீதம் இரண்டு உதாரணங்களுக்கு மொத்தம் 02 புள்ளிகள்)**

**(iii)** - ஒரு நிறுவனத்தின் நிரம்பல் வளையியானது சந்தையில் நிலவும் பல்வேறு விலைகளில் நிறுவனம் நிரம்பல் செய்ய விரும்பும் வெளியீட்டு மட்டத்தினைக் காட்டும். நிறைபோட்டி நிலைமையின் கீழ் இலாபத்தை உச்சப்படுத்த விரும்பும் ஒரு நிறுவனம் அதன் எல்லைச் செலவினை விலைக்கு சமப்படுத்தும் வெளியீட்டை நிரம்பல் செய்யும். இதனால் நிறைபோட்டி நிறுவனமொன்றின் சராசரி மாறுஞ் செலவுக்கு மேற்புறமான எல்லைச் செலவு வளையியே அந்நிறுவனத்தின் நிரம்பல் வளையியாகும்.

**(02 புள்ளிகள்)**

- நிறுவனத்தின் நிரம்பல் வளையியானது அதன் சராசரி மாறுஞ் செலவு வளையிக்கு மேற்புறமுள்ள எல்லைச் செலவு வளையியின் சகல புள்ளிகளாலும் குறிப்பிடப்படும்.

[மாற்றீடான விடை: நிறைபோட்டி நிறுவனமொன்றின் எல்லைச் செலவானது சராசரி மாறுஞ்செலவை விடக்கூடுதலாகவுள்ள வெளியீட்டு மட்டங்களில் அந்த நிறுவனத்தின் எல்லைச்செலவு வளையியே அதன் நிரம்பல் வளையியாகும்]

**(02 புள்ளிகள்)**

(iv) – மாற்றல் பெறுகைகள் (Transfer Payments) அல்லது சம்பாத்தியங்கள் குறித்த ஒரு காரணியலகு அதன் தற்போதைய பயன்பாட்டிலிருந்து வேறொரு தேவைக்காக இடமாற்றப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு உழைக்க வேண்டியுள்ள சம்பாத்தியத்தின் அளவாகும். மாற்றல் சம்பாத்தியங்கள் ஒரு காரணியை அதன் தற்போதைய பயன்பாட்டில் வைத்திருப்பதற்கான அமையச் செலவாகும். அது இக்காரணியைத் தொடர்ந்தும் பயன்பாட்டில் வைக்கத் தேவையான குறைந்தபட்சக் கொடுப்பனவாகும். **(02 புள்ளிகள்)**

- பொருளியல் வாடகை என்பது உற்பத்திக் காரணியானது மாற்றல் சம்பாத்தியங்களுக்கு மேலதிகமாக உழைக்கும் சம்பாத்தியங்களாகும்.

**(02 புள்ளிகள்)**

**(இவ்வினாவுக்கு விடையளிக்க வரைபடங்கள் தேவையில்லை)**

4. (i) பின்வருவனவற்றுள் ஒரு நாட்டின் நடப்பு வருடத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படுவன எவை, சேர்க்கப்படாதன எவை எனக் குறிப்பிட்டு, ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் உமது விடைகளை விளக்குக.

(அ) இல்லத்தரசி ஒருவர் நடப்பு வருடத்தில் தனது வீட்டுத் தோட்டத்தில் மரக்கறிகளைப் பயிரிடுகிறார். அறுவடை முழுவதும் வீட்டு நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) ஓய்வுபெற்ற தொழிலாளர் ஒருவர் அரசாங்கத்திடமிருந்து தனது ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெறுகிறார்.

(இ) மோட்டார் வாகன விற்பனையாளர் ஒருவர், பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றை விற்பதன் மூலம் தரகுப் பணத்தைப் பெறுகிறார்.

(ஈ) தாயொருவர் தனது மகளுக்கு வீட்டில் கணித பாடம் கற்க உதவுகிறார். (04 புள்ளிகள்)

(ii) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உங்களுக்குத் தரப்படுவதாகக் கருதுக.

| விடயம் | பெறுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 800 |
| தனியார் நுகர்வுச் செலவீடு | 3 000 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதனிலை வருமானம் | 100 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 900 |
| இருப்புகளில் ஏற்பட்ட மாற்றம் | −50 |
| ஏற்றுமதிகள் | 450 |
| இறக்குமதிகள் | 600 |
| உற்பத்தி மீதான தேறிய வரிகள் | 150 |

சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) பொருளாதாரமொன்றில், மக்களின் வாழ்க்கைத் தரத்தின் ஓர் அளவை என்ற வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பயன்படுத்துவதன் வரையறைகள் எவை ? (04 புள்ளிகள்)

(iv) பின்வருவனவற்றை விளக்குக.

(அ) கூட்டிய பெறுமதி

(ஆ) இருப்புக்கள் மீதான முதலீடு

(இ) மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

(ஈ) உற்பத்தி செய்யப்படாத நிதியல்லாச் சொத்துக்கள் (08 புள்ளிகள்)

(i) (அ) – உள்ளடக்கப்படும்: வீட்டுத்துறையினால் உற்பத்தி செய்யப்படும் எல்லாக் பொருள்களும் உற்பத்தி வரம்பினுள் உள்ளடங்கும்.

(ஆ) – உள்ளடக்கப்படமாட்டாது : ஓய்வு பெற்ற ஊழியர் தற்போதைய தொழிற்படையில் உள்ளடக்கப்படமாட்டார். கடந்த காலத்தில் மேற்கொண்ட அவரது சேவையின் பெறுமதி நடப்பாண்டின் உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்பட முடியாது. மேலும் அவரது ஓய்வூதியக் கொடுப்பனவு ஒரு மாற்றல் செலுத்தலாகும். அது ஒரு காரணிச்செலுத்தலாகக் கருதப்பட மாட்டாது. எனவே அது மொத்த உள்நாட்டு உற்பத்தியிலோ மொத்தத் தேசிய வருமானத்திலோ உள்ளடக்கப்பட மாட்டாது

(இ) – உள்ளடக்கப்படும் : மோட்டார் வாகன விற்பனையாளர் பழைய வாகனத்தை விற்றுப் பெற்ற தரகுப் பணமானது வர்த்தகம் என்னும் பயன்மிகு சேவையை மேற்கொண்டமைக்கான ஒரு கொடுப்பனவாகும். வர்த்தகத்தின் பெறுமதிச் சேர்க்கையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படும்.

(ஈ) - உள்ளடக்கப்படமாட்டாது : வீட்டுத்துறை அங்கத்தவர்களால் அவர்களது இறுதி நுகர்வுக்காக மேற்கொள்ளப்படும் சேவைகள் தேசிய கணக்குகளில் உற்பத்தியாகக் கணிப்பிடப்படுவதில்லை.

**(ஒவ்வொன்றுக்கும் தலா 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)**

**(ii)** - சந்தைவிலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி: (செலவீட்டு அணுகுமுறை)

GDP = C + I + G + X – M **(01 புள்ளி)**

= 3000 + 800 + (-50) + 900 + 450 – 600 **(02 புள்ளி)**

= ரூபா. 4,500 மில்லியன் **(01 புள்ளிகள்)**

(iii) - வாழ்க்கைத் தரத்தை அளவிடுவதற்கான அளவையென்ற வகையில் உள்நாட்டு உற்பத்தியின் வரையறைகள்:- மொ.உ.உ என்பது ஒரு பொருளாதாரத்தினுள் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சேவைகளின் பௌதீகப் பருமனின் ஓர் அளவையாகும். அது தரத்தில் ஏற்படும் பண்புசார் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்வதில்லை (உ-ம் சமாதானப் புறச்சூழல் கருத்துச் சுதந்திரம் நல்லாட்சி தெரிவுச் சுதந்திரம்) சமூகமொன்றில் மக்களின் வாழ்க்கைத் தரத்துடன் இவை முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

- பல நாடுகளில் முறைசாராத பொருளாதார நடவடிக்கைகள் அதிகளவில் இடம் பெறுதல் உண்மையான பௌதீக உற்பத்தியின் அளவைச் சரியாக அளவிட முடியாதுள்ளது. அளவிடப்படும் முறைசாரா துறை பற்றிய சரியான தகவல்கள் இல்லாத காரணத்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தித்தரவுகள் குறைமதிப்பீடு செய்யப்பட்டவையாக இருக்கலாம்.

- மொ.உ.உ தரவுகள் வருமானப்பங்கீட்டைக் கருத்திற் கொள்வதில்லை. மொ.உ.உ புள்ளிவிபரங்கள் நாடுகளுக்குள்ளே நிலவும் வருமானச் சமமின்மையை மறைப்பதாக உள்ளன

- மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அதனோடு தொடர்புபட்ட எண்ணக்கருக்களும் (மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி) ஒருநாட்டின் வாழ்க்கைத்தரத்தை அளவிடுவதற்கான பூரணமற்ற அளவீடுகளாகும். பல்வேறு பயன்மிகு பொருளாதார நடவடிக்கைகள் மொ.உ.உற்பத்தியில் உள்ளடக்கப்படுவதில்லை. உ-ம்:சித்திரம் வரைதல் வீட்டு வேலைகள் தோட்ட வேலைகள் போன்ற தமக்காக தாம் செய்யும் வேலைகள் உள்ளடக்கப்படுவதில்லை.

- அவதானிக்க முடியாத பொருளாதாரத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் (உதாரணமாக: சட்டவிரோத போதைப் பொருளுற்பத்தி) அவை பற்றிய தரவுகள் கிடைக்காத காரணத்தினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுவதில்லை.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது வெளியீடு எவ்வாறு மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு பங்களிப்புச் செய்யும் என்பதைக் கருத்திற் கொள்வதில்லை. அது வெறுமனே ஒரு நாடு எந்தளவு வெளியீட்டை மேற்கொள்கிறது என்பதை மட்டுமே கருத்திற் கொள்கிறது. உதாரணமாக நகர்ப்புற மக்கள், நகர்ப்புறப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் விதமாக தமது வருமானத்தின் ஒரு பகுதியை சில பொருட்களின் மீது செலவிடுவர். வீடுகளுக்கான பாதுகாப்பு முறைமைகள், மோட்டார் வாகனங்கள், தற்காப்பு பயிற்சி நெறிகள், மனஅழுத்தத்தைக் குறைக்கும் மருந்துவகைகள் போன்றன இந்நிலையில் உயர்ந்த மட்டத்திலான தலைக்குரிய மொ.உ.உற்பத்தியை கொண்டிருந்த போதிலும் காற்று, நீர் மற்றும் ஏனைய வளங்கள் மிகவும் மாசுபட்டுள்ளதால் மக்களின் வாழ்க்கைத்தரம் சிறந்த நிலையில் உள்ளதாகக் கருதமுடியாது.

- மொ.உ.உ எவ்வாறு ஓய்வு வாழ்க்கைத் தரத்திற்குப் பங்களிப்புச் செய்யும் என்பனபற்றிக் கருத்திற் கொள்வதில்லை. ஒரு நாடு அதன் மக்கள் நாளொன்றுக்கு 12 மணித்தியாலங்களும் வாரத்தின் ஏழு நாட்களும் வேலை செய்தால் அதன் வெளியீட்டை (மொ.உ.உ) அதிகரிக்க முடியும். எவ்வாறாயினும் அதிக உற்பத்திப் பொருள்களைக் கொண்டிருந்த போதிலும் அவற்றை அனுபவிப்பதற்கான ஓய்வு இல்லாவிட்டால் அவ்வுற்பத்தியினால் நன்மையடைந்ததாக அர்த்தப்படாது.

- மொ.உ.உ "நன்மைகளையும்" "தீமைகளையும்" கருத்திற் கொள்கிறது. ஒரு நாடு நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டு அழிவடைந்த நிலையில் மீளக்கட்டியெழுப்பப்படும் போது மொ.உ.உ அதிகரிக்கிறது. ஒருவர் சுகவீனமுற்று அதன் பொருட்டு வைத்திய சேவைகளுக்காக செலவிடப்பட்ட பணம் மொ.உ.உற்பத்தியின் ஒரு பகுதியாகக் கணிப்பிடப்படுகிறது. ஆனால் எவருமே நிலநடுக்கத்தின் மூலம் நன்மையடைவோமென்றோ நோய்வாய்ப்படுதல் நன்மையென்றோ வாதிட மாட்டார்கள்

- மொ.உ.உ புள்ளிவிபரங்கள் தொழினுட்பத்தின் நன்மையினைப் பூரணமாக அளவிடுவதில்லை. உங்கள் கைபேசியிலுள்ள போக்குவரத்து நெரிசல் பாதைகள் பற்றிய வழிகாட்டல்கள் வானிலை பற்றிய எதிர்வு கூறல்கள் உடனடிச் செய்திகள் போன்றவற்றை வழங்கும் இலவச அப்ளிகேஷன் பற்றிச் சிந்தியுங்கள். அது இலவசமாக வழங்கப்படுவதனால் விலைகளைப் பயன்படுத்தி அதற்காக நாம் வழங்க விரும்பும் பெறுமதியைக் கணிப்பிட முடியாது.

(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) (அ) கூட்டப்பட்ட பெறுமதி என்பது நிறுவனமொன்றின் வெளியீட்டிலிருந்து ஏனைய நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்த உள்ளீடுகளைக் கழிக்க வருவதாகும். எனவே இது ஒரு நிறுவனத்தின் சொந்த நடவடிக்கைகளால் அதன் உற்பத்தியில் சேர்க்கப்பட்ட பெறுமதியாகும். ஒரு பொருளாதாரத்திலுள்ள எல்லா நிறுவனங்களாலும் கூட்டப்பட்ட பெறுமதிகளின் மொத்தம் அந்நாட்டின் மொத்த வெளியீடாகும்.

(02 புள்ளிகள்)

(ஆ) கையிருப்புக்கள் என்பவற்றில் மூலப் பொருள்கள் அரைகுறையாகச் செய்து முடிக்கப்பட்ட பொருள்கள் மற்றும் நிறுவனங்கள் வைத்திருக்கும் முடிவுப் பொருட்களையும் உள்ளடக்கும்.

ஒரு நிறுவனம் கையிருப்புகளில் மேற்கொள்ளும் முதலீட்டு மட்டம் அதன் எதிர்காலக் கேள்வி பற்றிய எதிர்வு கூறல்களிலும் அதன் வெளியீட்டுத் திட்டத்திலும் தங்கியுள்ளது. கையிருப்புக்கள் மீதான முதலீடு உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களுடன் நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளது. உயர்ந்த வெளியீட்டு மட்டங்களை அடைய கையிருப்புகள் மீது அதிக முதலீடுகள் தேவைப்படும். அதன் மூலம் உற்பத்திச் செயன்முறையை சீராகப் பேணலாம்

(02 புள்ளிகள்)

(இ) மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி என்பது பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லா முடிவுப் பொருள்கள் சேவைகளினதும் விலை மட்டங்களின் ஓர் அளவையாகும். மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது, பெயரளவு (அல்லது நடைமுறைவிலை) மொ.உ.உற்பத்திக்கும் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் (நிலையான விலைகளில்) இடையிலான விகிதத்தினால் கணிப்பிடப்படும்

- $\text{மொ.உ.உ சுருக்கி} = \dfrac{\text{பெயரளவு மொ.உ.உ (நடைமுறை விலைகளில்)}}{\text{மெய் மொ.உ.உ (நிலையான விலைகளில்)}} \times 100$

(02புள்ளிகள்)

(ஈ) - தேசிய கணக்கீட்டில் நிதியல்லா உற்பத்தி செய்யப்படாத சொத்துக்களில் நாட்டின் உற்பத்தி வரம்பினுள் உற்பத்தி செய்யப்படாத ஆனால் பொருள்கள் சேவைகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படக் கூடிய சொத்துகள் உள்ளடங்கும்

- நிதியல்லா உற்பத்தி செய்யப்படாத சொத்துக்களில் இயற்கை வளங்கள் உள்ளடங்கும் (நிலம், கனிமங்கள் மற்றும் சக்திவளங்கள் இயற்கைக் காடுகள் நீர் வளங்கள் வானொலி கற்றைகள் மற்றும் ஏனையன) அத்துடன் ஒப்பந்தங்கள் அனுமதிப் பத்திரங்கள் நன்மதிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் சொத்துக்கள் போன்றனவும் உள்ளடங்கும்

**(02 புள்ளிகள்)**

**5.** (i) தன்னிச்சையான நுகர்வையும் தூண்டப்பட்ட நுகர்வையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகளைக் கருத்திற் கொள்க.

$C = 60 + 0.8Y_D$ $I = 100$ $G = 200$ $T = 150$ $Tr = 75$

$Y_D$ = செலவிடத்தக்க தேசிய வருமானம் C = நுகர்வு

I = முதலீடு G = அரசாங்கக் கொள்வனவுகள்

T = வரிகள் Tr = மாற்றல்கள்

(அ) இப்பொருளாதாரத்தின் சேமிப்புச் சார்பு யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) செலவிடத்தக்க தேசிய வருமானம் ($Y_D$) = 500 ஆயின், சராசரி நுகர்வு நாட்டத்தையும் சராசரி சேமிப்பு நாட்டத்தையும் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(இ) சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது ? (04 புள்ளிகள்)

(ஈ) முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது ? (02 புள்ளிகள்)

(iii) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் அரசாங்கக் கொள்வனவுகள் (G) ரூ. 400 பில்லியன், வரிகள் (T) ரூ. 300 பில்லியன், தனியார் சேமிப்புகள் (S) ரூ. 200 பில்லியன், தனியார் முதலீடுகள் (I) ரூ. 250 பில்லியன் ஆக உள்ளதெனக் கருதுக. இப்பொருளாதாரத்தின் தேறிய ஏற்றுமதிகளின் பெறுமதி யாது ? (04 புள்ளிகள்)

**(i)** - வருமான மட்டத்தில் தங்கியிராத நுகர்வு மட்டம் தன்னிச்சையான நுகர்வு எனப்படும் அது நுகர்வோன் வாழ்க்கையை நடத்திச் செல்லத் தேவையான குறைந்தபட்ச நுகர்வுமட்டத்தைக் குறிப்பிடும். அவனது நிகழ்கால வருமான மட்டம் பூச்சியமாயினும் வாழும் பொருட்டு அவன் குறைந்த பட்ச தொகையையேனும் நுகர வேண்டும் நுகர்வுச் சார்பொன்றின் வரைபடத்தில் குத்தச்சு வெட்டுப்புள்ளி தன்னிச்சையான நுகர்வு மட்டத்தைக் காட்டும்.

**(02 புள்ளிகள்)**

- நுகர்வுச் செலவீடானது செலவிடத்தக்க வருமானத்தின் ஓர் சார்பாகும். நுகர்வுச் செலவீடானது செலவிடத்தக்க வருமான மாற்றத்தினால் தூண்டப்படும். தன்னிச்சையான நுகர்வு மட்டத்தைத் தாண்டிய நுகர்வுச் செலவீட்டின் அளவு தூண்டப்பட்ட நுகர்வாகும். உதாரணமாக மொத்த நுகர்வு ருபா 2000 ஆகவும் தன்னிச்சையான நுகர்வு ருபா 800 ஆகவுமிருப்பின் தூண்டப்பட்ட நுகர்வின் அளவு ருபா 1200 ஆகும்.

**(02புள்ளிகள்)**

**(ii)** (அ) - சேமிப்புச் சார்பு: $S = -60 + 0.2Y_D$ **(02 புள்ளிகள்)**

(ஆ) - சராசரி நுகர்வு நாட்டம் (APC) $= C/Y_D$

$Y_D = 500$, ஆயின் $C = 60 + 0.8\,(500) = 460$ **(01 புள்ளி)**

$APC = 460/500 = 0.92$ **(01 புள்ளி)**

- சராசரி சேமிப்பு நாட்டம் (APS) $= S/Y_D$

$Y_D = 500$, ஆயின் $S = -60 + 0.2\,(500) = 40$ **(01 புள்ளி)**

$APS = 40/500 = 0.08$ **(01 புள்ளி)**

(இ) – சமநிலைத் தேசிய வருமான மட்டம்:

$Y = C + I + G$

$Y = 60 + 0.8\,Y_D + 100 + 200$ **(01 புள்ளி)**

$Y = 60 + 0.8\,(Y - T + Tr) + 300$

$Y = 360 + 0.8\,(Y - 150 + 75)$ **(01 புள்ளி)**

$Y = 360 + 0.8Y - 120 + 60$

$Y = 300 + 0.8Y$

$Y - 0.8Y = 300;\quad 0.2Y = 300;\quad Y = 1500$ **(02 புள்ளிகள்)**

(ஈ) – முதலீட்டுப் பெருக்கி $(k) = \frac{1}{1-MPC} = \frac{1}{1-0.8} = \frac{1}{0.2} = 5$

**(02 புள்ளிகள்)**

**(iii)** - $S + T + M = I + G + X$

$S + T - (I + G) = X - M$ (= தேறிய ஏற்றுமதிகள்)

$200 + 300 - (250 + 400) = (X - M)$ (= தேறிய ஏற்றுமதிகள்)

$500 - 650 = 150$ (= தேறிய ஏற்றுமதிகள்)

**(04 புள்ளிகள்)**

[மாற்றீடான விடை:மொத்த உள்நாட்டு சேமிப்பு (GDS) = I + (X-M)

$GDS = S_P + S_G = I + (X-M)$

$200 + (T - G) = 250 + (X-M)$

$200 + (300 - 400) = 250\,(X-M)$

$200 + (-100) - 250 = (X-M)$

$-150 = (X-M)$ (=தேறிய ஏற்றுமதிகள்)]

## உப பிரிவு 'ஆ'

6. (i) இலங்கையில் தற்போது பொது விலைமட்ட மாற்றங்களைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் அளவைகள் எவை ? (03 புள்ளிகள்)

(ii) பணவீக்கத்தின் பாதகமான விளைவுகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் வர்த்தக வங்கி முறைமையினுள் இயங்கும் வர்த்தக வங்கியொன்றின் எளிமைப்படுத்தப்பட்ட ஐந்தொகை பின்வருமாறு:

| பொறுப்புகள் | பெறுமதி (மில்லியன் ரூபா) | சொத்துக்கள் | பெறுமதி (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| வைப்புகள் | 100 000 | தேவைப்படும் ஒதுக்குகள் | 10 000 |
| பங்குடைமையாளரின் மூலதனம் | 25 000 | மிகை ஒதுக்குகள் | 5 000 |
| | | பிணையங்கள் | 30 000 |
| | | கடன்கள் | 80 000 |
| மொத்தப் பொறுப்புகள் | **125 000** | மொத்தச் சொத்துகள் | **125 000** |

(அ) தேவைப்படும் ஒதுக்கு வீதம் யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக் கணக்கிலிருந்து 2 000 மில்லியன் ரூபாவை மீளப் பெறுகிறார் எனக் கொள்க. இக்காசு மீளப் பெறலின் காரணமாக இவ்வங்கியின் ஒதுக்குகள் எந்த அளவினால் மாற்றமடையும் ? (02 புள்ளிகள்)

(இ) தேவைப்படும் ஒதுக்கு வீதம் மாறாதிருக்கும் நிலையில் ரூ. 2 000 மில்லியன் பணம் வைப்பிலிருந்து மீளப்பெறப்பட்டதன் பின்னர் இவ்வங்கியானது வழங்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச தொகை யாது ? (02 புள்ளிகள்)

(iv) பணக் கொள்கை என்பதனால் கருதப்படுவதென்ன ? (03 புள்ளிகள்)

(v) இலங்கை மத்திய வங்கியின் தொகைசார் கடன் கட்டுப்பாட்டு முறைகளுக்கும் பண்புசார் கடன் கட்டுப்பாட்டு முறைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

**(i)** – கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
- தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்
- உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்
- மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

**(ஒரு குறிகாட்டிக்கு 01 புள்ளி வீதம் மூன்று குறிகாட்டிகளுக்கு 03 புள்ளிகள்)**

**(ii)** – வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.
- பணவீக்கமானது பல்வகையான பொருளாதார நடத்தைகளில் பிறழ்வுகளை ஏற்படுத்தி பொருளியல் முகவர்கள் மீது செலவுகளைச் சுமத்தும்
- நியாயமற்ற வருமானப் பரம்பல்: நிலையான ஓய்வூதியங்களைப் பெறும் முதியவர்கள் போன்ற பலவீனமான சமூகக் குழுக்கள் பாதிக்கப்படுவர் பலமான பேரம் பேசும் சக்தியைக் கொண்டுள்ள ஏனைய குழுக்கள் நன்மையடைவர்.
- பணவீக்கமானது கடன் வழங்குவோரிடமிருந்து கடன் பெறுபவரை நோக்கி செல்வத்தை மீள்பங்கீடு செய்யும்
- பணவீக்கம் செலாவணி மிகை மதிப்பீட்டிற்கு இட்டுச் செல்லும் இதனால் வர்த்தக நிலுவை பாதகமாக மாறும்
- பணவீக்கத்தால் ஏற்படும் நிட்சயமற்ற தன்மையானது நிறுவனங்களின் நடத்தையைப் பாதித்து செலவுகளை ஏற்படுத்தும்.
- நீண்டகாலத் திட்டமிடல் கடினமானதாக மாறும். நிறுவனங்கள் பயன்மிகு பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து முதலீடுகளை பொருள்களைப் பதுக்கி வைத்தல் மற்றும் உத்தேச நடவடிக்கைகள் என்பவற்றை நோக்கி நகர்த்த முயற்சிப்பர்

- செருப்புத் தேய்தல் செலவு மற்றும் விலைப்பட்டியல் மாற்றும் செலவு: துரித பணவீக்கம் நிலவும் காலப்பகுதியில் நுகர்வோர் விலை அதிகரிக்காத பொருள்கள் சேவைகளைத் தேடியலைவதில் அதிக நேரத்தையும் முயற்சியையும் செலவிடுவர். விலைப்பட்டியல் மாற்றும் செலவுகள், அடிக்கடி விலைப்பட்டியல்களை மாற்றியமைத்தல், விற்பனை இயந்திரங்களைச் சீராக்குதல் போன்றவற்றுக்கான செலவுகள் ஏற்படும்.

**(ஒரு தீமையான விளைவுக்கு 01 புள்ளி வீதம் நான்கு விளைவுகளுக்கு 04 புள்ளிகள்)**

**(iii)** (அ) $\text{தேவையான ஒதுக்கு வீதம்} = \dfrac{\text{தேவையான ஒதுக்குகள்}}{\text{வைப்புகள்}} \times 100 = \dfrac{10,000}{100,000} \times 100 = 10\%$

**(02 புள்ளிகள்)**

(ஆ) ரூபா. 2000 மில்லியன்களால் குறைவடையும் **(02 புள்ளிகள்)**

(இ) காசு மீளப் பெறலின் பின்னர் மிகை ஒதுக்கினளவு:

உண்மையான ஒதுக்குகள் = 10,000 + 5000 - 2000 = 13,000
தேவையான ஒதுக்குகள் = 98,000 x 10% = 9,800
மிகை ஒதுக்குகள் = 13,000 – 9800 = 3,200
புதிய கடன்களின் உச்ச அளவு = ரூபா. 3,200 மில்லியன் **(02 புள்ளிகள்)**

**(iv)** – பணக்கொள்கை என்பது பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களை அடையும் நோக்கில் மொத்தக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு முயற்சியாக பணத்தின் அளவு கடன் கிடைப்பனவுத் தன்மை கடனுக்கான செலவு (வட்டிவீதம்) என்பவற்றில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களைக் கருதும். பணக்கொள்கையானது ஒரு நாட்டின் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும்.

**(03புள்ளிகள்)**

[மாற்றீடான விடை: பொருளாதாரமொன்றில் விலையுறுதிப்பாட்டு பேரினப் பொருளாதாரக் குறிக்கோளை அடையும் நோக்கில் மத்திய வங்கியானது பொருளாதாரத்தில் பணத்தின் நிரம்பலையும் அதன் விலையினையும் முகாமை செய்யும் செயன்முறையாகும். இலங்கையில் பணக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாகும். பிரதானமாக கொள்கை வட்டிவீதங்களை நிர்ணயித்தல் மற்றும் பொருளாதாரத்தின் திரவத்தன்மையினை முகாமை செய்தல் என்பன இதில் உள்ளடங்கும்.]

**(v)** - முழுப் பொருளாதாரத்தினதும் கடனின் அளவு மற்றும் அதன் விலை (வட்டிவீதம்) என்பவற்றை நிருவகிக்கப் பயன்படும் கடன் கட்டுப்பாட்டு முறைகளே தொகைக் கடன் கட்டுப்பாட்டு முறைகளென அழைக்கப்படும். அவை தெரிவுக்கடன் கட்டுப்பாடுகளைப் போலன்றி முழுப் பொருளாதாரத்தையும் பாதிக்கவல்லன.

- தொகைக் கடன் கட்டுப்பாட்டு முறைகள் கொள்கை வட்டி வீதங்களையும் (தயார் நிலை வைப்பு வீதம், தயார்நிலை கடன்வசதி வீதம் வங்கி வீதம்) திறந்த சந்தை நடவடிக்கைகளையும் நியதி ஒதுக்குத் தேவைகளையும் உள்ளடக்கும்.

**(02 புள்ளிகள்)**

- பண்புசார் கடன் கட்டுப்பாட்டு முறைகள் பொருளாதாரத்தின் தெரிவு செய்யப்பட்ட துறைகளை நோக்கி கடனளவையும் அதன் திசையினையும் நிருவகிக்கும் வண்ணம் பயன்படுத்தப்படுகின்றன. அவை பாகுபாடு காட்டுந்தன்மை கொண்டவையாகும்

- கடனளவின் மீதான தொகைக் கட்டுப்பாடுகள் வட்டிவீத மேல் எல்லைகளை நிருணயித்தல், மீள் கடன் வசதிகள், எல்லைநிலைத் தேவைகளை நிருணயித்தல் பெறுமதி விகிதங்களுக்கான கடன் வழங்கல் (loan to value ratios) ஒழுக்கக் கட்டுப்பாடுகள் என்பன பண்புசார் கட்டுப்பாட்டு முறைகளாகும்.

**(02 புள்ளிகள்)**

7. (i) பின்வருவன தனியார் பொருள்களா, பொதுப் பொருள்களா அல்லது பொதுவளங்களா என்பதை நிருணயிக்குக.
   (அ) சமுத்திரங்களில் உள்ள மீன்கள்
   (ஆ) தொலைக்காட்சி ஒளிபரப்பு சமிக்ஞைகள்
   (இ) வாழ்க்கை முறை மற்றும் கொலஸ்ட்ரோல் மட்டங்கள் பற்றி நடத்தப்படும் ஓர் அடிப்படை ஆய்வு
   (ஈ) பதிவுரிமையை (patent) பெற்றுக்கொள்ளக் கூடிய, கொலஸ்டரோல் மட்டத்தைக் குறைக்கும் மருந்தொன்றின் மீதான சிறப்பு ஆய்வு (04 புள்ளிகள்)

(ii) தாராள சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத் தலையீட்டை நீர் எவ்வாறு நியாயப்படுத்துவீர் ? (04 புள்ளிகள்)

(iii) வரி அறவிடல் பற்றிய செங்குத்தான சமத்துவம், கிடையான சமத்துவம் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பாதீட்டுக் குறை நிலையானது சந்தை வட்டி வீத அதிகரிப்புக்கும், தனியார் முதலீட்டு வீழ்ச்சிக்கும் பங்களிப்பு நல்குவதாக பொருளியலாளர்கள் சிலர் வாதிடுவது ஏன் ? (04 புள்ளிகள்)

(v) "பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் பொதுப் படுகடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான சதவீதமானது இப்போதும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டுள்ளது." பொதுபடுகடனை நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் நிலைபேறுடைய மட்டத்தில் பேணிச் செல்வதை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(i) - (அ) பொதுவளம்
   (ஆ) பொதுப் பொருள்
   (இ) பொதுப் பொருள்
   (ஈ) தனியார் பொருள்

**(ஒவ்வொன்றுக்கும் தலா 01புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) தாராள சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தலையீட்டிற்கான நியாயப் படுத்தல்கள்:
- சந்தைப் பொருளாதாரமொன்றின் வினைத்திறனான இயக்கத்திற்குத் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகளை உருவாக்குதல் (சட்டங்களையும் ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்தல்)
- வள ஒதுக்கீட்டு வினைத்திறனை மேம்படுத்தல் (வெளிவாரிகள், மேன்மைப் பொருள்கள்,பொதுப் பொருள்கள்)
- நியாயமான வருமான மற்றும் செல்வப் பங்கீடு
- பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல்
- உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்
- போட்டித்தன்மையை உறுதி செய்யும் நிருவாக நடைமுறைகள்

**(ஒவ்வொன்றுக்கும் தலா 01புள்ளி வீதம் நான்கு காரணங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) - வரிவிதிப்பு நோக்கத்திற்கான கிடையான சமத்துவம் என்னும் எண்ணக்கருவானது பொருளாதார ரீதியில் சமமான நிலையில் உள்ளோரைச் சமமாகக் கருதுவதைக் குறிக்கும் “சமமானவர்கள் சமமாக நடத்தப்படவேண்டும்”.

**(02 புள்ளிகள்)**

- செங்குத்தான/ நிலைக்குத்தான சமத்துவம் என்பது வருமானம், செல்வம், செலுத்தக் கூடிய இயலுமைக்கான ஏனைய அளவைகள் என்பவற்றின் வேறுபாடுகளுக்கேற்ப மக்களை வேறுபட்ட விதத்தில் நடத்துவதாகும். “சமமற்றவர்கள் சமமற்ற விதத்தில் கருதப்பட வேண்டும்” விருத்திமுறை வரிகள் பெரும்பாலும் குத்தான சமத்துவத்தின் அடிப்படையிலேயே நியாயப் படுத்தப்படுகின்றன.

**(02 புள்ளிகள்)**

(iv) - அரசாங்கப் பாதீட்டுக் குறைநிலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பொதுச் சேமிப்பை வீழ்ச்சியடையச் செய்யும். தனியார் சேமிப்பில் மாற்றமேதும் ஏற்படவில்லை எனக் கொண்டால் பொதுச் சேமிப்பில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி தேசிய சேமிப்பை குறைவடையச் செய்யும். இது கடன் வழங்கும் நிதிகளுக்கான சந்தையில் பிரதிபலிக்கும் சேமிப்பிலேற்படும் வீழ்ச்சி மெய் வட்டிவீதத்தை அதிகரிப்பதனால் தனியார் முதலீடுகள் வீழ்ச்சியடையும்.

- பொருளாதார ரீதியில்அரசாங்கம் தனது பாதீட்டுக் குறைநிலையை ஈடு செய்ய தனியார் சேமிப்புகளைப் பயன்படுத்தும். அரசாங்கத்தின் மேலதிகக் கடன் பெறலானது கிடைக்கின்ற சிறிய தொகை சேமிப்புகளுக்காக முதலீட்டாளர்களை போட்டியிட நிர்ப்பந்திக்கும். இதனால் மெய் வட்டிவீதம் அதிகரிக்கும். வட்டிவீத அதிகரிப்பு முதலீடுகளைக் கவர்ச்சியற்றதாக்கும். இது தேசிய சேமிப்பின் வீழ்ச்சியுடன் முதலீட்டின் வீழ்ச்சியையும் ஏற்படுத்தும். அதிகரித்த பாதீட்டுக் குறைநிலையானது தனியார் முதலீடுகளைக் குறைவடையச் செய்யும் போக்கு “வெளித்தள்ளுகை விளைவு” எனப்படும்.

**(04புள்ளிகள்)**

(v) - அரசாங்கம் 2020 ஆகும் போது மத்திய அரசாங்கத்தின் குறைநிலையினை குறைந்த பட்சம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.5% ஆகக் குறைக்க இலக்கு நிருணயித்துள்ளது. வரிநிருவாகத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ) வரி அடிப்படையை விரிவாக்கவும் (ஆ) வரிமுறைமையினை முன்னேற்றல் (இ) வருவாய் நிருவாகத்திற்கான இயலளவை அதிகரித்தல் மற்றும் பொது நிதியியல் முகாமைத்துவத்தை வலுப்படுத்தல் என்பவற்றில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

- செலவீடுகளை தர்க்கரீதியான விதத்தில் மேற்கொள்ளல் மற்றும் அரசதுறை வியாபார முயற்சிகளின் [State Owned Business Enterprises (SOBE) ] இறைசார் இடரபாயத்தைக் குறைத்தல் என்பவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது
- அரசதுறை வியாபார முயற்சிகளை மீளமைப்பதன் மூலமாகவும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதன் மூலமாகவும் பொறுப்புக் கூறுந் தன்மையை அறிமுகப்படுத்துவதன் மூலமாகவும் அவற்றை வியாபார ரீதியில் சாத்தியமானவையாக மாற்றியமைத்தல்
- வரிவீதத்தை அதிகரிக்கவும் வரிஅடித்தளத்தை விரிவாக்கவும் வரி விலக்குகளை நீக்கவும் ஏதுவாகும் விதத்தில் 2016 இல் பெறுமதி சேர்வரி சட்ட (திருத்தம்) கொண்டு வந்துள்ளமை.
- 2017 இல் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அறிமுகப்படுத்தியமை
- வரி விலக்குகளை வழங்கும் இயலுமையை மீளமைக்கும் விதத்தில் 2016 இல் முதலீட்டுச் சபைச் சட்டத்தை திருத்தியமைத்தல்.
- பிரதான உள்ளூர் வரிகளுக்கு புதிய தகவல் தொழினுட்பத்தை (RAMIS) அறிமுகப்படுத்தல். வருமான வரிக்கும் பெறுமதி சேர் வரிக்கும் இணைய தளத்தைப் பயன் படுத்தி படிவங்களைப் பூர்த்தி செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் நான்கு விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

**8.** (i) A நாட்டுக்குச் சொந்தமான ஊழிய வளங்களின் அளவு 200 அலகுகளெனவும் B நாட்டுக்குச் சொந்தமான ஊழிய வளங்களின் அளவு 200 அலகுகளெனவும் கொள்க. ஒவ்வொரு நாட்டிலும் X மற்றும் Y ஆகிய பொருள்களில் ஓர் அலகினை உற்பத்திசெய்யத் தேவையான ஊழிய அலகுகளின் எண்ணிக்கைகள் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

| A நாடு | | B நாடு | |
|---|---|---|---|
| பொருள் | ஊழிய அலகு | பொருள் | ஊழிய அலகு |
| X | 5 | X | 4 |
| Y | 4 | Y | 8 |

(அ) ஒவ்வொரு நாட்டினதும் உற்பத்தி இயல்தகவு வளையிகளைத் தனித்தனியே வரைந்து, அவற்றைச் சரியாகப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) ஒவ்வொரு நாட்டிற்கும் எந்தப் பொருள் தொடர்பில் முழு நன்மை காணப்படுகிறது? விடையை விளக்குக. (02 புள்ளிகள்)

(இ) ஒவ்வொரு நாட்டிற்கும் எந்தப் பொருள் தொடர்பில் ஒப்பீட்டு நன்மை காணப்படுகிறது? விடையை விளக்குக. (02 புள்ளிகள்)


(ii) ஒப்பீட்டு நன்மையை உருவாக்கும் ஏதேனும் இரு மூலாதாரங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)


(iii) சென்மதி நிலுவை அட்டவணையின் நடைமுறைக் கணக்கின் பிரதான மாறிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iv) பெயரளவு நாணய மாற்றுவீதத்திற்கும் பயனுறுதிவாய்ந்த நாணய மாற்றுவீதத்திற்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) தாராள வர்த்தகத்திற்குச் சார்பாக முன்வைக்கப்படும் வாதங்கள் எவை ? (04 புள்ளிகள்)

**(i) (அ) - ஒவ்வொரு நாட்டினதும் உற்பத்தி இயல்தகவு வளையி வரைபுகள்:**




**(02 புள்ளிகள்)** **(02 புள்ளிகள்)**

(ஆ) – A நாடு Y பொருள் உற்பத்தியில் முழுநன்மையைக் கொண்டுள்ளது ஏனெனில் அதன் உற்பத்திச் செலவு B நாட்டைவிட குறைவாக உள்ளது.

**(01 புள்ளி)**

- Bநாடு X பொருள் உற்பத்தியில் முழுநன்மையைக் கொண்டுள்ளது ஏனெனில் அதன் உற்பத்திச் செலவு A நாட்டைவிட குறைவாக உள்ளது.

**(01 புள்ளி)**

(இ) – A நாடு Y பொருள் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது, ஏனெனில் Y பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவ X பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவைவிடக் குறைவாக உள்ளது.

X பொருள் உற்பத்தியின் அமையச்செலவு = 5/4 = 1.25

Yபொருள் உற்பத்தியின் அமையச்செலவு= 4/5 = 0.8 **(01 புள்ளி)**

- B நாடு X பொருள் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது, ஏனெனில் X பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவ Y பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவைவிடக் குறைவாக உள்ளது.

X பொருள் உற்பத்தியின் அமையச்செலவு = 4/8 = 0.5
Y பொருள் உற்பத்தியின் அமையச்செலவு = 8/4 = 2.0 **(01 புள்ளி)**

**(ii)** - காரணிக் கிடைப்பனவு
- தொழினுட்பம்
- சிறக்குமியல்பு (ஊழிய உற்பத்தித்திறன்)
- சுவையும் தெரிவுகளும்
- இடஅமைவு
- ஆரம்ப நிலைமைகள் (முதலில் ஆரம்பிப்பவருக்கான /முதல் இயங்குபவருக்கான நன்மை)
- அளவுத்திட்டச் சிக்கனங்கள்
- பொருட்களின் வாழ்க்கை வட்டம்.

**(ஏதேனுமிரு காரணங்களுக்கு தலா 01 புள்ளி வீதம் மொத்தம் 02 புள்ளிகள்)**

**(iii)** சென்மதி நிலுவை நடைமுறைக்கணக்கின் பிரதான கூறுகளாவன:
- பொருள்கள் மற்றும் சேவைகள் (பணிகள்) கணக்கு பொருள்கள் சேவைகள்
- முதனிலை வருமானக் கணக்கு
- இரண்டாம் நிலை வருமானக் கணக்கு **(02 புள்ளிகள்)**

**(எல்லாக் கூறுகளும் பட்டியலிடப்படாவிட்டால் புள்ளிகள் வழங்கப்படக் கூடாது)**

**(iv)** - பெயரளவு நாணய மாற்றுவீதம் என்பது இரு நாணயங்களுக்கிடையிலான நாணய மாற்று **வீதமாகும்.**அதாவது ஒரு நாட்டு நாணயத்தின் பெறுமதியை இன்னொரு நாட்டு நாணயத்தில் கூறுவதாகும்.
- பெயரளவு நாணய மாற்று வீதத்தை வெளிப்படுத்துவதற்கு இரு முறைகள் உண்டு அவையாவன: நேர்கூறல் மற்றும் மறைமுகக்கூறல் ஆகும். நேர் கூறலின் படி ஓரலகு வெளிநாட்டு நாணயத்தின் விலையானது உள்நாட்டு நாணய அலகுகளில் வெளிப்படுத்தப்படும் (உ+ ம். $ 1 = Rs. 160). மறைமுகக் கூறலின்படி ஓரலகு உள்நாட்டு நாணயத்தின் விலை வெளிநாட்டு நாணய அலகுகளால் வெளிப்படுத்தப்படும் (உ+ ம். Rs. 1 = $ 0.006).

**(02 புள்ளிகள்)**

- பயனுறுதிவாய்ந்த நாணயமாற்றுவீதமானது ஒரு கூடை நாணயங்களுக்கு சார்பாக ஒரு நாணயத்தின் பலத்தைக் காட்டும் ஒரு சுட்டியாகும் இருபக்க நாணய மாற்றுவீதம் ஒரு சோடி நாணயங்களுடன் தொடர்புபட்டுள்ள அதேவேளை பயனுறுதிவாய்ந்த நாணய மாற்றுவீதம் ஒரு கூடை வெளிநாட்டு நாணயங்களின் நிறையிடப்பட்ட சராசரியாகும். இது ஒரு நாட்டின் ஒட்டுமொத்த போட்டித்தன்மையின் ஓர் அளவீடாகக் கருதப்படலாம்
- பயனுறுதிவாய்ந்த நாணயமாற்றுவீதத்தின் இருவகைகளுண்டு: பெயரளவுப் பயனுறுதிவாய்ந்த நாணய மாற்றுவீதம் மற்றும் மெய்ப்பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம் பெயரளவுப்பயனுறுதி வாய்ந்த நாணய மாற்றுவீதம் வர்த்தகப்பங்காளி நாடுகளின் விலைமட்ட வேறுபாடுகளுக்கு சீராக்கம் செய்யப்படாத நாணய மாற்று வீதமாகும். மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதமானது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விலைமட்ட வேறுபாடுகளுக்கு சீராக்கஞ் செய்யப்பட்ட நாணயமாற்று வீதமாகும்.

**(02 புள்ளிகள்)**

**(v) தாராள வர்த்தகத்திற்குச் சார்பான வாதங்கள்:**

உள்நாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் போட்டியைச் சந்திக்கும் இதனால் செலவுகளைக் குறைத்து வினைத்திறனை மேம்படுத்த ஊக்குவிப்புகள் காணப்படும்.

- **சிறக்குமியல்பு** : தாராள வர்த்தகம் சிறக்குமியல்பை ஏற்படுத்தும். ஒரு நாடு குறைந்த அமையச் செலவு கொண்ட வினைத்திறனான பொருள்களை மட்டும் உற்பத்தி செய்யும்
- **நுகர்வு** : நாடுகள் தமது உற்பத்தி இயல்தகவு வளையிக்கு வெளியில் நுகர்வுச் சேர்க்கைகளை நுகர்வதை வர்த்தகம் சாத்தியமாக்குகிறது. ஆதலால் நுகர்வின் அளவு அதிகரிக்கும்
- **சந்தைச் சக்தி** : வர்த்தகத்தடைகள் இல்லாத நிலையில் தாராள வர்த்தகமானது உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மையை ஏற்படுத்துவதால் தனியுரிமைகளின் சந்தைச் சக்தியை குறைக்கும். இதனால் உள்நாட்டுத் தனியுரிமைகள் உயர் விலைகள் அறவிடுவதை தடுக்கும்
- **விலை** : உள்ளூர் நிறுவனங்கள், பல்வேறு நிறுவனங்களின் விலைப் போட்டியைச் சந்திக்க நேரிடும்
- **தொழில்நுட்பம்** : தாராள வர்த்தகமானது நாடுகளுக்கிடையில் தொழினுட்பப் பரிமாற்றத்தை இலகுவாக்கும் இது தொழினுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தம்
- **அளவுத்திட்டச் சிக்கனங்கள்** : நாடுகள் சில பொருள்கள் தொடர்பில் சிறக்குமியல்பை அடைவதால் அவை அளவுத்திட்டச் சிக்கனங்களை அனுபவிக்கும் இதனால் சராசரிச் செலவுகள் வீழ்ச்சியடைவதால் நன்மையடையலாம்
- **பல்வகைப் பொருள்கள்** : வெவ்வேறு நாடுகளிலிருந்து பொருள்களை பெறமுடிவதனால் பல்வகைப் பொருள்களை நுகர முடியும்
- **வாழ்க்கைத்தர அதிகரிப்பும் வறுமைக்குறைப்பும்** : வர்த்தகத்திற்குத் திறந்து விடப்பட்ட நாடுகள் நீண்டகாலத்தில் துரிதமாக வளர்ச்சியடையும் அதேவேளை உயர் மட்ட தலைக்குரிய வருமான மட்டத்தைக் கொண்டிருக்கும் என்பதற்கான சான்றுகள் உள்ளன

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் நான்கு விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

**9.**

(i) 'பொருளாதார வளர்ச்சியை' வரைவிலக்கணப்படுத்தி, பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கியமான மூலதாரங்களைக் குறிப்பிடுக. **(05 புள்ளிகள்)**

(ii) வறுமையை ஒழிப்பதில் பொருளாதார வளர்ச்சியானது போதுமான நிபந்தனையாக அமையுமா ? விடையை விளக்குக. **(05 புள்ளிகள்)**

(iii) 'பேண்தகு அபிவிருத்தி' என்பதனால் நீர் கருதுவதென்ன ? **(05 புள்ளிகள்)**

(iv) ஊழியப் படையில் பெண்களின் பங்குபற்றல் வீத அதிகரிப்பானது இலங்கை தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்ததேன் ? விடையை விளக்குக. **(05 புள்ளிகள்)**

(i) பொருளாதார வளர்ச்சி என்பது காலப் போக்கில் தேசிய வெளியீடு மற்றும் வருமான மட்டங்களில் அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவில் நிலையான அதிகரிப்பை ஏற்படுத்தும் செயன்முறையாகும்.

**(02 புள்ளிகள்)**

**வளர்ச்சியின் பிரதான மூலாதாரங்கள்:**

- வளத்திரட்சியில் ஏற்படும் அதிகரிப்பு : பௌதீக மூலதனம், இயற்கை மூலதனம், மனித மூலதனம், சமூக மூலதனம்
- உற்பத்தித்திறன் அதிகரிப்பு : தொழினுட்ப விருத்தி,புத்தாக்கங்கள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் அதிகரிப்பு, முகாமைத்துவத்தில் ஏற்படும் முன்னேற்றம்
- பொருளாதார உறுதிப்பாடு (விரும்பத்தக்க பேரினப்பொருளாதார அடிப்படைகள்)
- முயற்சியாண்மைத் திறன்களின் விருத்தி
- வர்த்தகத்திற்கும் முதலீட்டிற்கும் திறந்துவிடப்படல்
- ஊக்குவிப்புகள்
- நல்லாட்சி

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மூன்று விடயங்களுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)**

(ii) - உலகம் முழுவதும் வறுமைக்கு எதிராகப் போராடுவதில் பொருளாதார வளர்ச்சியானது மிகப்பலம் வாய்ந்த ஒரு சக்தியென நிரூபிக்கப்பட்டுள்ளது.

- வளர்ச்சியானது சுபீட்சத்தையும் வாய்ப்புக்களையும் மீண்டும் மீண்டும் ஏற்படுத்தவல்லது. உறுதியான வளர்ச்சியும் தொழில்வாய்ப்புகளின் உருவாக்கமும் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதன் மூலம் அவர்களின் கல்வியில் முதலீடு செய்வதற்கான ஊக்குவிப்பை மேம்படுத்தும்.

- ஆனால் வெவ்வேறு நிலைமைகளின் கீழ் ஒரேமாதிரியான வளர்ச்சி வீதங்கள் வறுமைநிலை மற்றும் வறியவர்கள் தொழில்களைக் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் அத்துடன் பரந்துபட்ட மனித அபிவிருத்திக்குறிகாட்டிகள் என்பவற்றின் மீது மிகவும் வேறுபட்ட விளைவுகளைக் கொண்டிருக்கலாம்.

- வளர்ச்சியானது எந்தளவுக்கு வறுமையைக் குறைக்கும் என்பது வளர்ச்சிச் செயன்முறையில் வறியவர்கள் பங்குபற்றும் தன்மையிலும் அதன் பலன்களை பங்கிட்டுக் கொள்ளும் தன்மையிலும் தங்கியுள்ளது. எனவே வறுமையைக் குறைப்பதில் வளர்ச்சியின் போக்கும் அதன் தன்மையும் முக்கியமானதாகும்.

**(02 புள்ளிகள்)**

- பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்ததாகக் காணப்படும். வருமான சமமின்மையானது வறுமையை ஒழிப்பதில் பொருளாதார வளர்ச்சியின் செயற்திறனைப் பாதிக்கும்.

- வறுமையை ஒழிப்பதில் வளர்ச்சி முக்கியமானதாக இருந்தபோதிலும் அதனோடு இணைந்ததாக வறியவர்கள் பயனுறும் விதத்தில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் அதன் உறுதிப்படுத்தல் கொள்கைகளும் சமகாலத்தில் அமுல்படுத்தப்படாவிட்டால் வளர்ச்சியினால் மட்டும் வறுமையை ஒழித்து விடமுடியாது.

- வளர்ச்சியின் வடிவமும் வீச்சும் வளர்ச்சிச் செயன் முறையில் உள்ளடக்கப்படாதவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதில் முக்கியத்துவம் பெறுகின்றன. இதன் மூலம் சமூகத்தின் சகல அங்கத்தவர்களும் வளர்ச்சிச் செயன்முறையில் பங்குபற்றவும் அதிலிருந்து நன்மையடையவும் முடியும்.

- வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகளோடு வறியவர்கள் வாய்ப்புக்களை பயன்படுத்திப் பங்குபற்றுவதை அனுமதிக்கும் கொள்கைகளையும் இணைக்க வேண்டியது முக்கியமாகும் இதில் ஊழிய சந்தை சிறப்பாக இயங்குதல் பால்வேறுபாடுகளைக் களைதல் மற்றும் நிதிசார் உள்வாங்கல் (financial inclusion) போன்றவற்றை உள்ளடக்கலாம்.

- வறுமை ஒழிப்பு தொடர்பில் வறியவர்கள் எதிர் நோக்கும் இடரபாயங்களுக்கெதிராக சமூக வலைப்பின்னலொன்றின் அவசியம் உணரப்பட்டுள்ளது **(03புள்ளிகள்)**

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மூன்று விடயங்களுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)**

**(iii)** - பேண்தகு அபிவிருத்தி என்பது எதிர்கால சந்ததி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் இயலுமையைப் பாதிக்காதவாறு நிகழ்காலத்தில் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான அபிவிருத்திச் செயன்முறையாகும்.

**(02 புள்ளிகள்)**

- பேண்தகு அபிவிருத்தியின் அடிப்படையில் சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் ஆகிய மூன்று தூண்கள் காணப்படுகின்றன

- எவ்விதத்தில் நோக்கினாலும் அடிப்படை அம்சங்கள் ஒன்றேயாகும்: மக்கள் வாழிடம் மற்றும் பொருளாதார முறைமைகள் என்பன ஒன்றுடனொன்று தொடர்புபட்டவையாகும்.

**(02 புள்ளிகள்)**

- பேண்தகு அபிவிருத்தி என்பது ஒரு எண்ணக்கருச் சட்டகமாகும்: உலகின் முதன்மையாகவுள்ள கருத்துக்களிலிருந்து முழுமையானதும் சமநிலையானதுமான கருத்தினை நோக்கிச் செல்வதாகும்.

- பேண்தகு அபிவிருத்தி என்பது ஒரு செயன் முறையாகும். எல்லாத் தீர்மானங்கள் தொடர்பாகவும் காலம் மற்றும் படிமுறைகள் ஊடாக ஒருங்கிணைப்புக் கோட்பாட்டைப் பிரயோகிக்கும் வழிமுறையாகும்.

- பேண்தகு அபிவிருத்தி என்பது ஒரு இறுதி இலக்காகும். வளங்களின் அழிவு, சுகாதாரப் பாதுகாப்பு, சமூக உள்வாங்கல், வறுமை மற்றும் வேலையின்மை போன்ற குறிப்பான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீரப்பதாகும்.

**(ஏதாவது விளக்கத்திற்கு 01 புள்ளி)**

**(iv)** ஊழியப் படையில் பெண்களின் பங்குபற்றலை முன்னேற்றுவதன் முக்கியத்துவம்:

- கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பில் பால் நிலைச் சமத்துவத்தை ஏற்படுத்துவதில் இப்பிராந்தியத்தில் இலங்கை ஒரு முன்னுதாரணமாகும். ஆயினும் ஊழியப்படையின் பெண்களின் பங்குபற்றலில் இது பிரதிபலிக்கவில்லை. எழுச்சி பெற்றுவரும் நாடுகளுடன் மற்றுமன்றி பிராந்தியத்திலுள்ள சில குறைந்த வருமானம் பெறும் நாடுகளுடன் ஒப்பிடும் போதும் ஊழியப்படையின் பெண்களின் பங்குபற்றல் இலங்கையில் குறைவாகவே உள்ளது. 2017 ஆண்டில் இலங்கையில் ஊழியப்படையின் பங்குபற்றல் வீதம் ஆண்களில் 75% ஆகவும் பெண்களில் 37% ஆகவும் இருந்தது
- இலங்கையில் ஊழியப்படையின் பெண்களின் பங்குபற்றல் வீதத்தை முன்னேற்றுவது சனத்தொகை மூப்படைவதால் 2026 ஆகும் போது ஏற்படவுள்ள ஊழியப்படையின் சுருக்கத்தின் பாதிப்பை தாக்குப்பிடிக்க முக்கியமானதாகும்
- ஊழியப்படையிலுள்ள சனத்தொகையின் பங்கு குறைவதனால் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி குறைவடையலாம் எவ்வாறாயினும் இப்போக்கினை ஊழியப் படையிலுள்ள கல்விகற்ற (குறிப்பாக க.பொ.த உயர்தரம் அல்லது குறைவான) பெண்களின் குழாத்தினை ஒருங்கிணைப்பதன் மூலம் திருப்பிவிட முடியும்

- ஊழிய சந்தையில் நிலவும் பால் இடைவெளிகள் காரணமாக இலங்கை தற்போது கணிசமானளவு வருமான இழப்பைச் அனுபவிக்கிறது. ஊழியப் படையின் பங்குபற்றலில் நிலவும் பால் இடைவெளிகள் காரணமாக எற்படும் செலவுகள் தலைக்குரிய வருமானத்தின் சுமார் 20% ஆகக் காணப் படுகின்றன

- பால்நிலை இடைவெளிகளை நீக்குவது எதிர்க்கணிய குடித்தொகை விளைவுகளை எதிரீடு செய்ய உதவும். குடித்தொகை போனஸ் நிலைமையிலிருந்து முதிர் குடித்தொகை நோக்கி நகரும் போது எதிர்காலத்தில் தங்கியிருக்கும் சனத்தொகை அதிகரிக்குமென எதிர்பார்க்கலாம். தொழில் புரியும் நபர்கள் உழைக்கும் வருமானங்கள் தங்கிவாழும் அதிக எண்ணிக்கையிலான நபர்களை ஆதரிக்கப் போதுமானதாக அமையாது. எனவே பெண்கள் ஊழியப்படையில் பங்குபற்றுவதை முன்னேற்றுவது இப்போது மிக முக்கியமானதாகும்

**(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளி வீதம் மொத்தம் 05 புள்ளிகள்)**

10. (i) உலக சந்தையில் இலங்கையின் போட்டித் தன்மையை அதிகரிப்பதற்குப் பொருத்தமான கொள்கை சார்ந்த நடவடிக்கைகள் யாவை ? (05 புள்ளிகள்)

(ii) 2002 - 2016 காலப்பகுதியில் இலங்கையின் வறுமைநிலை மற்றும் வருமானச் சமமின்மையின் போக்குகளைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

(iii) 1977 இல் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தாராளமயமாக்கல் சீர்திருத்தங்களின் பிரதான அம்சங்கள் எவை ? (05 புள்ளிகள்)

(iv) நிலைபேறுடையதும் துரிதமானதுமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு இலங்கை வெற்றி கொள்ளவேண்டியுள்ள பிரதான சவால்கள் யாவை ? (05 புள்ளிகள்)

(i) உலக சந்தையில் போட்டித்தன்மையை மேம்படுத்தும் நடவடிக்கைகள்:
- நிலையானதொரு தேசிய அபிவிருத்திக் கொள்கையின் தேவை உணரப்பட்டுள்ளது.
- உட்கட்டுமான வசதிகளின் தரத்தினை மேம்படுத்தல்
- நிருவாகத் தடைகளை நீக்குதல்
- ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் அறிவுச் செறிவுடைய முயற்சிகளை ஊக்குவித்தல்.
- பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை மேம்படுத்தல்

**(ஒவ்வொன்றுக்கும் தலா 01 புள்ளி வீதம் மொத்தம் 05 புள்ளிகள்)**

(ii)

| குறிகாட்டி | 2002 | 2006/07 | 2009/10 | 2012/13 | 2016 |
|---|---|---|---|---|---|
| தலைக்குரிய வறுமைக் குறிகாட்டி (%) | 22.7 | 15.2 | 8.9 | 6.7 | 4.1 |
| மாதாந்த வீட்டுத்துறை வருமானத்திற்கான கிணி குணகம். | 0.48 | 0.49 | 0.49 | 0.48 | 0.45 |
| மிகச் செல்வந்த 20% வீதத்தினர் பெற்ற வருமானம் | 53.7% | 54.7% | 54.1% | 52.9% | 50.8% |
| மிக வறிய 20% வீதத்தினர் பெற்ற வருமானம் | 4.8% | 4.6% | 4.5% | 4.5% | 4.8% |

- 2002-2016 காலப்பகுதியில் தேசிய வறுமை மட்டம் தொடர்ச்சியாகக் குறைவடைந்துள்ளது

(01 புள்ளி)

- ஏதேனும் இரு ஆண்டுகளின் வறுமைக் குறிகாட்டிகளைக் குறிப்பிட்டிருப்பின்

(02 புள்ளிகள்)

- வருமான ஏற்றத்தாழ்வுகள் 2010 ஆம் பின்னர் மெதுவாகக் குறைவடைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

(01 புள்ளி)

- ஏதேனும் இரண்டு வருடங்களின் வருமானப் பங்கீட்டுக் குறிகாட்டிகளுக்கு (01 புள்ளி)

**(ஒன்றுக்கு மேற்பட்ட வருடங்களுக்கான பெறுமதிகள் தரப்பட்டால் மட்டும் புள்ளிவழங்கவும்)**

**(iii)** 1977 பொருளாதார தாராளமயமாக்கலின் பண்புகள்:

- இறக்குமதிகள் மீதான தொகைசார் கட்டுப்பாடுகள் பெரும்பாலும் நீக்கப்பட்டன. அவை இறக்குமதித் தீர்வைகளால் பதிலீடு செய்யப்பட்டன்.
- செலாவணிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மற்றும் பல்நாணய மாற்றுவீதம் ஒன்றிணைக்கப்பட்டு இலங்கை ரூபா மதிப்பிறக்கம் செய்யப்பட்டது.
- உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி முகாமை செய்யப்பட்ட மிதக்கவிடலின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- இறக்குமதிகள் மீதான சில கட்டுப்பாடுகள், வெளிநாட்டு பயணங்கள், வெளிநாட்டு கல்வி என்பவற்றின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.
- நேரடிக்கட்டுப்பாடுகளும் நிருவாக நடைமுறைகளும் சில மானியங்களும் நீக்கப்பட்டன அல்லது கணிசமானளவில் குறைக்கப்பட்டன.
- கோதுமை மா, வளமாக்கி, பாற்பொருட்கள் மற்றும் பெற்றோலியப் பொருள்கள் மீதான மானியங்கள் குறைக்கப்பட்டன.
- வெளிநாட்டு முதலீட்டை கவரும் பொருட்டு கொழும்புப் பங்குச் சந்தையில் வெளிநாட்டவர்கள் பங்குபற்றுவதற்கு இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.
- முதலீட்டுச் சபையின் (BOI) கீழ் முதலீடு செய்யும் வெளிநாட்டவர்களுக்கு விரிவாக்க வசதிகள் வழங்கப்பட்டன. [BOI, முன்னர் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (GCEC) என அழைக்கப்பட்டது.]
- வங்கி முறைமையில் பிரவேசிப்பதற்கான தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- வட்டிவீதக்கட்டமைப்பு தாராளமயமாக்கப்பட்டது.
- அரசதுறை முயற்சிகளை தனியார்மயமாக்கியமை.
- ஊழிய சந்தை தாராளமயமாக்கப்பட்டமை.
- வெளிநாட்டு நிதிச் சந்தை

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 05 விடயங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**

**(iv)** - பொருளாதார வளர்ச்சியானது குறிப்பிடத்தக்களவு கட்டமைப்பு ரீதியான பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளது:அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது பிரதானமாக வியாபார ரீதியிலான கடன்களில் பெருமளவில் தங்கியுள்ள அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு மீதான செலவுகளுடாக வர்த்தகமல்லாத் துறைகளிலேயே ஏற்பட்டுள்ளது.

- தொடர்ச்சியான பாதீட்டுக் குறைநிலை மற்றும் வெளிநாட்டு நடைமுறைக்கணக்கு குறைநிலை என்பன முதலீட்டாளரின் நம்பிக்கையைச் சிதைத்து குறைந்தளவு உள்ளூர் தனியார் முதலீட்டையும் குறைந்தளவு வெளிநாட்டு நேரடி முதலீட்டு மட்டத்தையும் ஏற்படுத்தியது.
- ஏற்றுமதிச் செயலாற்றம் மிகவும் பலவீனமாகவுள்ளது. இலங்கையின் எற்றுமதிகள் இன்னும் ஒருசில குறைதொழினுட்பப் பொருள்களிலேயே தங்கியுள்ளது. பொருளாதாரத்தின் ஏற்றுமதிக்கு எதிரான பலமான சார்புத்தன்மையானது போட்டித்தன்மையற்ற நாணயமாற்று வீதத்தினாலும் உயர்ந்த பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதங்களின் விளைவினாலும் ஏற்பட்டதாகும்.
- பொது நிதியியல் நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சியில் வரையறைகளை ஏற்படுத்தியுள்ளது. நீண்ட காலமாக அரசாங்க வருவாயில் எற்பட்ட உறுதியான வீழ்ச்சியானது பொதுப்படுகடனின் திரட்சியில் குறிப்பாக இடரபாயமிக்க சலுகையற்ற வெளிநாட்டு கடன் பெறலில் அதிகரிப்பை எற்படுத்தியுள்ளது
- வளர்ச்சியானது அரசாங்கத்தின் நிருவாகக் கட்டுப்பாடுகளாலும் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தடைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீதும் வரையறைகளை ஏற்படுத்தியுள்ளது.
- தற்போதைய தொழிற்படையின் திறன்களின் தரம் உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தின் தேவைகளோடு பொருந்துவதாக இல்லை.
- உட்கட்டமைப்பு வசதிகளின் தரம், சக்திவளத்தின் விலையிடல், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புகள் நிதிவசதிகளைப் பெறுவது (குறிப்பாக இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள்) என்பன வரையறைகளை எற்படுத்தியுள்ளது
- பலவீனமான நிதியியல் நிலைமை, அரச தொழில் முயற்சிகளின் தரமற்ற சேவை வழங்கல் என்பன உற்பத்தித் திறனிலும் வளர்ச்சியிலும் மேலதிக வரையறைகளை எற்படுத்தியுள்ளது.
- நீண்டகாலப் பொருளாதாரக் கொள்கைகளின் நிட்சயமற்ற தன்மை.
- அரசியல் மற்றும் சமூக உறுதியற்ற தன்மை.

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 05 விடயங்களுக்கு மொத்தம் 05 புள்ளிகள்)**